www.nunnarivu.com DECEMBER 2024 Price ₹ 15/ -

நீதியின்

# நுண்ணறிவு

புலனாய்வு இதழ்
Vol.5 Issue.3
NEETHIYIN NUNNARIVU
புலனாய்வு இதழ்



## ஃபெஞ்சல் புயல் பாதிப்பு... முதல்வர் மு.க.ஸ்டாலின் நிவாரணம் அறிவிப்பு!



## துப்பாக்கி சுடும் போட்டியில் பதக்கம் வென்றவர்களுக்கு காவல்ஆணையர் வாழ்த்து!



## பேராவூரணி வட்டார வளர்ச்சி அலுவலரின் அலட்சியம்... முடங்கிக் கிடக்கும் வளர்ச்சி திட்டங்கள்

நடவடிக்கை எடுப்பாரா திட்டஇயக்குநர்..?




## "நான் கடந்து வந்த பாதை..." டிஎஸ்பி சுபாஷ் சந்திரபோஸ்


SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com


SODEX
Floor Cleaner
Toilet Cleaner
Liquid Laundry Detergent
Fabric Softener
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaglivakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
பொருளோ தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!

# நீதியின் நுண்ணறிவு

புலனாய்வு இதழ்



**ஆசிரியர் – வெளியீட்டாளர்**

**R.சிவகுமார்**

இணை ஆசிரியர்கள்

**J.கணேசபாண்டி,**

**A.விஜய்,**

**G.ஜெயபிரகாஷ்நாராயணன்**

துணை ஆசிரியர்கள்

**D.சிவராஜ், K.பாரதிராஜா,**

**G.சுரேந்திரன், B.காந்திநாதன்,**

**S.ராஜ்நாராயணன்**

கௌரவ ஆலோசகர்கள்

**R.வீரராகவன்** B.Sc., M.A., M.B.M., L.L.B.,

**A.கந்தசாமி** S.P.

காவல்துறை கண்காணிப்பாளர் (ஓய்வு)

**Dr.K.முருகேசன்** M.B.B.S., D.L.O.,

**மா.செல்வராஜ்**

(முன்னாள் முதல்வர் - குருநானக்கல்லூரி)

**சோம்புராஜன்**

கூடுதல்ஆணையர், தொழிலாளர்துறை (ஓய்வு)

**டாக்டர். மணிவண்ணன்** B.S.M.S.

**S.வீரப்பன்**

முதன்மை நிருபர்கள்

**M.சுப்பிரமணியன், R.சதீஷ்குமார், S.ஆனந்த்,**

**V.மாதவன், A.ராஜ்மோகன்**

நிருபர்கள்

**R.இன்பசேகரன், G.மோகன், S.சாம்ஏட்வின்,**

**C.சரவணன், S. சீனிவாசன், M.G.செந்தில்குமார்,**

**R.நடராஜன், S.சஞ்சய் குமார்,**

**இம்ரான்கான், J.ஜஸ்டின்டேவிஸ், A.மதிமாறன்**

புகைப்பட கலைஞர் : **விஜயகுமார்**

சட்ட ஆலோசகர்கள்

**K.M.S.செந்தில்குமார்** BSc., B.L.,

**M.சரவணன்** M.Sc., B.L.,

**A.வெங்கடேஷ்பாபு** B.Sc., B.L.,

வடிவமைப்பு : 4 மீடியா டிசைன்ஸ்



நிர்வாக அலுவலகம்:

எண். 14/88, வெங்கடேஸ்வரா நகர், 3வது மெயின்ரோடு, வேளச்சேரி, சென்னை- 42.

போன்: **9884949445, 99624 56555**

இமெயில்: **nunnarivuidhal@gmail.com**

**www.nunnarivu.com**



ALLRIGHTS RESERVED LEGAL JURISDICTION IN CHENNAI CITY COURT ONLY. NOTHING IN NEETHIYIN NUNNARIVU IS INTENDED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FAITH PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.


**ஆசிரியர் பக்கம்**




# சைபர் குற்றங்கள்.. விழிப்புணர்வு தேவை

தொழில்நுட்ப யுகத்தின் கட்டுப்பாடற்ற இணையத்தில் ஒரு மிகப்பெரிய சவாலாக மாறியிருக்கிறது சைபர் குற்றங்கள்.

இன்றைய சைபர் குற்றங்கள் ஒரு தனி நபரின் செயல் அல்ல – அது ஒரு சிக்கலான, உலகளாவிய நெட்வொர்க் ஆகும். அதிநவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு, கணிசமான அளவிலான மோசடிகள் நடைபெற்று வருகின்றன.

2016–ல் 12,317 இணைய குற்றங்கள், 2020–ல் 50,000 இணைய குற்றங்கள், 2023–ல் 7.9 கோடி சைபர் குற்றங்கள்

தமிழ்நாட்டில் மட்டும் ஒரே ஆண்டில் 1,100 கோடி ரூபாய் இணைய மோசடிகளால் பறிக்கப்பட்டுள்ளது. சைபர் குற்றங்கள் இப்போது தனிநபர்களிடமிருந்து பெரு நிறுவனங்கள் வரை பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

மோசடியின் வகைகளும் ஹேக்கிங், பாலியல் தொந்தரவு, மத வெறுப்பு பரப்புதல், அவதூறு பரப்புதல், பிளாக்மெயிலிங் என தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன.

**தற்காப்பு வழிமுறைகள் :**

அறிமுகமில்லாத எண்களிலிருந்து வரும் அழைப்புகளை புறக்கணிக்கவும்.

சந்தேகமான இணைப்புகளை திறக்காதீர்கள்.

தங்கள் தனிப்பட்ட தகவல்களை கவனமாக பாதுகாக்கவும்.

மோசடிகள் மாறிக் கொண்டே இருக்கும் – ஆனால் நம் விழிப்புணர்வும் அதற்கேற்ப மாறியே ஆக வேண்டும்!



**R.சிவகுமார்,**

**ஆசிரியர்**

# அதிகாரிகளின் அலட்சியத்தால் அழியும் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை..




தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் திரு.மு.கருணாநிதி அவரது வழிகாட்டியான திரு.அண்ணாதுரை அவர்களின் பெயரில் 1970ல் அடிக்கல் நாட்டப்பட்டு, அப்போதை மாநில ஆளுநர் திரு.சுகாத்தியா அவர்களால் 1977ம் ஆண்டு திறக்கப்பட்டது. இது தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தை உள்ளடக்கிய கரும்பு விவசாயிகளை கொண்டது. ஒரு காலத்தில் பல விவசாயிகளை கொண்ட இந்த சர்க்கரை ஆலை தற்போது நலிவடைந்து கொண்டே வருகிறது காரணம் அதிகாரிகளின் அலட்சியமே. இது தொடர்பாக தமிழக கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் தலைவர் ராமசாமி மற்றும் செயலாளர் தோழிகிரிபட்டி திரு.கோவிந்தராஜ் அவர்கள் தலைமையில் பல போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பாக செயலாளர் அவர்களை சந்தித்தபோது அவர் நம்மிடம் தெரிவித்தது. பழம் பெருமை வாய்ந்த இந்த சர்க்கரை ஆலையை தலைமை நிர்வாகி திரு.ரவிச்சந்திரன் மற்றும் நிர்வாக அலுவலர் மற்றும் கரும்பு அலுவலர் ஆகிய மூன்று பேரும் மோசமான நிலைக்கு கொண்டு சென்று விட்டனர் என்று தெரிவித்தார்.



மேலும் ரூபாய் 1000 வீதம் 20,000 விவசாயிகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த 1000 ரூபாய்க்கு எந்தவித வட்டியோ அல்லது பங்கு ஈவோ கிடையாது. முன் கூட்டியே எங்களுக்கு கரும்பு வெட்ட ஆணை வழங்கினால் வெட்டு கூலி மிச்சமாகும். முன்பு இருந்த திமுக ஆட்சியில் வெட்டு கூலியும், போக்குவரத்து செலவும் ஆலையின் நிர்வாகமே ஏற்றது. தற்போது டன்னுக்கு விலை குறைவாக கொடுப்பதால் விவசாயிகள் பலரும் மரவள்ளி சாகுபடிக்குச் சென்று விட்டனர். ஒரு

காலத்தில் குடியரசு தலைவரிடம் சிறந்த ஆலைக்கான விருது பெற்றது. தற்போது நலிவடைந்து வருகிறது. 1970களில் எங்களிடம் பெற்ற 1000 ரூபாய்க்கு ஒரு வீட்டுமனை வாங்கி இருந்தால் இன்று பல லட்ச ரூபாய் எங்களுக்கு கிடைத்திருக்கும். ஆனால் இன்று எங்களுக்கு கிடைத்திருப்பது மன வேதனையே என்று முடித்தார்.



27.11.24 ல் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் தமிழ்நாடு சர்க்கரை கழக 49வது பேரவை கூட்டம் மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சர்க்கரை கழக தலைவரும் மேலாண்மை இயக்குநருமான அன்பழகன் கலந்து கொண்டு உரையாற்றினார். 100 விவசாயிகளிடம் வாங்கப்படும் கரும்பை கொண்டு 60 விவசாயிகளுக்கு மட்டுமே பணம் வழங்க முடிகிறது. மேலும் விவசாயிகள் கரும்பு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். உற்பத்தி குறைவதால் தான் தனியார் ஆலைகள் மூடப்படுகின்றது என்று பேசினார். அதிகாரிகள் தங்களின் அதிகார செலவையும், அலட்சியத்தையும் குறைத்துக் கொண்டால் கரும்பு உற்பத்தியும், விவசாயிகளும் அதிகமாவார்கள் என்று விவசாயிகளில் சிலர் கூறினார்கள்.

மேலும் மகாராஷ்டிராவில் கரும்பு உற்பத்தியும், சர்க்கரை ஆலையும் லாபத்தில் இயங்குகின்றது. இதை தமிழக முதல்வர் கவனிப்பார் என்று நம்புகிறோம் என்று முடித்தார்கள். மக்களின் மனவோட்டத்தை முதல்வர் கவனிப்பாரா?

# திருவண்ணாமலை மண் சரிவு...

## முதல்வர் நிவாரணம் அறிவிப்பு!

தென்மேற்கு வங்கக்கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் தமிழகத்தின் பல்வேறு வட மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. அந்த வகையில் திருவண்ணாமலையில் தொடர்ந்து பரவலாக மழை பொழிந்து வரும் நிலையில் திருவண்ணாமலை வ.உ.சி நகரில் (01.12.2024) இரவு மண் சரிவு ஏற்பட்டது. இதில் பல வீடுகள் பாதிக்கப்பட்டன. சுமார் 20 மணி நேரமாக உள்ளே சிக்கியுள்ளவர்கள் நிலை என்ன எனத் தெரியாமல் இருந்த நிலையில் மீட்புப் பணியில் பயன்படுத்தப்பட்ட ஜேசிபி இயந்திரத்தில் சிறுவனின் உடல் ஒன்று சிக்கியது. அந்த உடல் கௌதமன் (வயது 9) என்ற சிறுவனின் உடல் என்பது தெரியவந்துள்ளது.




இந்த மண் சரிவில் சிக்கிய 7 பேரில் 5 பேரின் உடலும், இருவரின் உடல் பாகங்களும் கண்டெடுக்கப்பட்டன. எனவே இந்த 2 பேரின் உடல்களை மீட்பதில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகிறது. இந்த சம்பவம் திருவண்ணாமலையில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து மண் சரிவில் இறந்தவர்களின் உறவினர்கள் 50க்கும் மேற்பட்டோர் சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் நிலச்சரிவில் சிக்கியவர்களின் உடல்களை முழுமையாக மீட்கவில்லை எனக் குற்றம் சாட்டினர். அதோடு மீட்புப் பணி தாமதமாக நடைபெற்று வருகிறது என போலீசாரிடம் வாக்குவாதம் செய்தனர்.

இந்நிலையில் மண் சரிவில் சிக்கி உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ. 5 லட்சம் நிவாரணமாக வழங்கத் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். மேலும் இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இரங்கல் செய்தியில், “தேசிய பேரிடர் மீட்புப் படையினரின் முயற்சிகள் பலனளிக்காமல் போனது துரதிருஷ்டவசமானது” என முதலமைச்சர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் மகேஷ் பொய்யாமொழியின் சப்போர்ட்லதான் சகலமும் செய்கிறாரா ஆய்வாளர் சுகுமாரன்..?


G சுகுமாரன், காவல் ஆய்வாளர், கந்தர்வகோட்டை

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகே உள்ள அரியாணிபட்டி கிராமத்தில் கடந்த தீபாவளி மறுநாள் முத்தரையர் சமூகத்தை சார்ந்த இரண்டு இளைஞர்கள் முயல்வேட்டைக்கு சென்று சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட மின்வேலியில் அகப்பட்டு மர்மமான முறையில் இறந்து கிடந்தது தெரிய வந்தது. இந்த சம்பவம் தொடர்பாக வழக்கு பதியப்பட்டு விசாரணை செய்ய கடமைப்பட்டிருந்த கந்தர்வகோட்டை காவல் ஆய்வாளர் சுகுமாரன் சம்பந்தப்பட்ட தோப்பின் உரிமையாளர்களை கைது செய்யாமல் வேறு ஒரு நபர்களை கைது செய்து உண்மையான குற்றவாளிகளை தப்பிக்க வைத்ததோடு அல்லாமல் உண்மையான குற்றவாளிகளின் புகைப்படங்களையும் ஊடகங்களுக்கு கொடுக்காமல் பாதுகாத்திருக்கிறார்.


பேராசிரியர் கோ.ஆறுமுகம்


எழுத்தாளர் துரை குணா

சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட மின்வேலியில் உயிரிழந்த இரண்டு இளைஞர்கள் உடலும் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்துக்கு அப்பால் கிடந்ததுதான் அங்கு உள்ளவர்களுக்கு பெரும் சந்தேகத்தை கிளப்பியது. எனவேதான் அங்கு இருக்கக்கூடிய சமூக கூட்டமைப்புகள் ஒன்றிணைந்து பேராசிரியர் ஆறுமுகம் தலைமையில் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். ஆக போராட்டம் நடந்தால் உண்மை வெளியே வந்து விடும் என்பதை தெரிந்து கொண்ட ஆய்வாளர் சுகுமாரன் இந்த போராட்டத்தை நிறுத்தி பிரச்சனையை வேறு திசை நோக்கி நகர்த்தி ஆறுமுகத்தை ஏதாவது செய்ய வேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டு அங்கு இருக்கக்கூடிய போலீஸ் புரோக்கர்களை பிடித்து ஆறுமுகத்துக்கு யார் எதிரான நபர்களோ அவர்களை அழைத்து ஆறுமுகத்தை சிக்க வைக்க ஒரு ஏற்பாடு செய்து அந்த ஏற்பாட்டையும் கனக்கச்சிதமாக முடித்திருக்கிறார்.

பேராசிரியர் கோ.ஆறுமுகம் பட்டியலின சமூகத்தை சேர்ந்தவர். இவர் இயற்பியல் பிரிவில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். தனியார் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். மேலும் இவர் பல தமிழ் ஆய்வு கட்டுரைகள் கவிதை நூல்கள் எழுதியுள்ள தமிழ் பற்றாளர். இந்த நிலையில் பேராசிரியர் மீது பொய் வழக்கு போட்டு கைது செய்த நிலையில் நடுவர் நீதிமன்றம் அழைத்துச் சென்றுள்ளார்.கந்தர்வகோட்டை நடுவர் மன்ற நீதிபதி, நடந்த உண்மைகளை அறிந்து பேராசிரியரை சிறைக்கு அனுப்பாமல் சொந்த ஜாமினில் விடுவித்துள்ளார். இதனால் ஆய்வாளர் சுகுமாரன் மேலும் கடுப்பாகியுள்ளார். நீதிமன்றத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட



பேராசிரியர் தனது செல்போனை வாங்க காவல் நிலையத்துக்கு சென்ற போது காவல் ஆய்வாளர் சுகுமாரனும் உதவி ஆய்வாளர் வீரபாண்டியனும் கடுமையாக தாக்கியதில் பேராசிரியருக்கு நான்கு பற்கள் உடைக்கப்பட்டு தஞ்சை அரசு மருத்துவ கல்லூரியில் சேர்க்கப்பட்டு இப்போது வீடு திரும்பி உள்ளார்.

ஒரு கண்ணியமிக்க பேராசிரியரை ஒரு தமிழ் பற்றாளரை சைக்கோ குணத்தோடு வஞ்சகம் தீர்க்கும் காவல் ஆய்வாளர் சுகுமாரன் யார் என்று விசாரித்த போது? இவர் பூர்வீகம் தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு புதூர் என தெரிய வருகிறது. இவரது மனைவி உயர் நீதிமன்ற வழக்கறிஞர். இவர் பட்டுகோட்டையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது அப்பகுதியை சார்ந்த ஒரு வழக்கறிஞரை தாக்கியதால், பட்டுக்கோட்டை வழக்கறிஞர்கள் சங்கம் நீதிமன்றத்தை புறக்கணித்து சுகுமாரனை கண்டித்து போராட்டம் நடத்தியது. அதன் விளைவாக சுகுமாரன் தஞ்சாவூருக்கு பணி மாறுதலாகி சென்றுள்ளார். பின்பு சுகுமாரன் பணி உயர்வு பெற்று திருச்சி மாநகர் காந்தி மார்க்கெட் காவல் நிலைய ஆய்வாளராக சென்றுள்ளார்.

திருச்சி காந்தி மார்க்கெட் காவல் நிலையத்தில் இருந்தபோது அங்கே ஒரு பெண்ணுடன் குஜாலாவாக இருந்தது, வெளியே தெரிய வர, அங்கிருந்து காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் எங்கு இருந்தாலும் அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி எனக்கு சொந்தக்காரரர் எனது சாதிக்காரர் என சொல்லி எல்லோரையும் மிரட்டிக்கொண்டு பணம் பறிக்கும் வேலையில்தான் முழு நேரமும் ஈடுபடுவார் என்பது தான் இவர் மீதான குற்றச்சாட்டு.

பேராசிரியர் விவாகரத்தை வெளியே கொண்டு வந்த காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கத்தின் புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எழுத்தாளர் துரை குணா தெரிவிப்பது..

முதல்ல நாங்க காவல்துறைக்கு எதிரானவர்கள் அல்ல என்பதை நீங்கள் புரிஞ்சுக்கணும், காவல் ஆய்வாளர் சுகுமாரன் அவர்கள் ஒரு தவறை மறைப்பதற்கு பல பல தவறுகளை செய்து கொண்டு வருகிறார். பேராசிரியர் ஆறுமுகத்தை கந்தர்வகோட்டை நடுவர் நீதிமன்றம் சொந்த ஜாமினில் விட்ட பிறகும், ஆறுமுகத்தின் செல்போனை பிடுங்கி வைத்துக் கொண்டு ஸ்டேஷனுக்கு வரச் சொல்லி அடிப்பது எவ்வளவு பெரிய மனித உரிமை மீறல்? பல்லே இல்லாத ஆறுமுகத்தை, நான் எப்படி, பல்லை உடைக்க முடியும்? என மேல் அதிகாரிகளிடம் காவல் ஆய்வாளர் சுகுமாரன் தெரிவித்திருக்கிறார்? நாம விசாரிச்ச வகையில் பேராசிரியர் ஆறுமுகத்திற்கு சர்க்கரை நோயால் கீழே இருக்கக்கூடிய நாலு பற்களும் மிகவும் பலவீனமாக இருந்துள்ளது. அந்த வகையில் தான் அவர் அடித்த போது விழுந்திருக்கிறது. சம்பவத்தின் போது சிசிடிவி கேமரா ஆய்வுகளைக் கேட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஆறுமுகத்தின் பெயரில் மனு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இப்பொழுது காவல் நிலையத்திலும் மருத்துவமனையிலும் கேமராக்கள் புதிதாக பொருத்தப்பட்டு வேறு திசை நோக்கி வைத்துள்ளார்கள்.

கந்தர்வகோட்டை காவல் நிலையத்திற்கு சுகுமாரன் அவர்கள் வந்த பிறகு அவரால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் பலர் எஸ்பி ஆபிஸில் கொடுத்த புகார் மனுவை விசாரிக்கவே ஒரு தனி கமிஷன் அமைக்க வேண்டும்? தேவையில்லாமல் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழியின் பெயரையும் இழுத்து உள்ள விடுகிறார், இதனால் அரசுக்கும் அமைச்சருக்கும் மிகப்பெரிய அவமானங்களை தேடித் தருகிறார்.

கந்தர்வகோட்டை பகுதியில் சமூக விரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் முயல் வேட்டையின் போது மர்மமான முறையில் இறந்த இரண்டு இளைஞர்களின் படுகொலையில் தொடர்புடைய முக்கியமான நபர்கள் தொடர்ந்து காவல் ஆய்வாளருக்கு ஆதரவாக இருந்து வருகிறார்கள். இந்த போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கது. இதை கண்டறிந்து முளையிலே கில்லாவிட்டால் விரைவில் ஆளும் அரசுக்கும், தமிழ்நாடு காவல்துறைக்கும் மிகப்பெரிய தலைகுனிவை ஏற்படுத்தும்..



# அதிகாரியை அலட்சியப்படுத்திய அரசியல்வாதி...

தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டை சாலையில் நடைபாதையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட கடைகளை அதிகாரிகளின் முன்னிலையில் பொக்லைன் இயந்திரம் மூலம் அகற்றப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நாஞ்சிக்கோட்டை ஊராட்சி உள்ளது. இது தற்போது தஞ்சாவூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு ஆண்டுகளுக்கு முன் அண்ணாநகர் முதல் புறவழிச்சாலை வரை ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு அகலப்படுத்தப்பட்டு மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டது. மேலும் இரும்பு கம்பிகளைக் கொண்டு தடுப்பு அமைக்கப்பட்டது.

இந்நிலையில் வடிகால் அமைக்கப்பட்ட இடத்தின் மேல் அதாவது நடைாபதையில் கடைகளை அமைத்து வியாபாரிகள் சிலர் வியாபாரம் செய்து வந்தனர். பொதுமக்கள் கேட்டால் அரசாங்கம் எங்களுக்காக கட்டி கொடுத்துள்ளது என்று அன்பாக பொதுமக்களிடம் கூறினார்கள். சிலர் நடைபாதையிலேயே இரவு உணவகத்தை நடத்தி வந்தனர். இந்நிலையில் பொதுமக்களில் சிலர் புகார் அளித்ததன் பேரில் நெடுஞ்சாலை துறையினர் முன் அளிப்பு வழங்கினர். ஆனால் அவர்கள் அதை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. இந்நிலையில் 25.11.24 அன்று காலையில் நெடுஞ்சாலை துறை கோட்ட உதவி இயக்குநர் கீதா, உதவிப் பொறியாளர் லெட்சுமி பிரியா மற்றும் வல்லம் துணை கண்காணிப்பாளர் கணேஷ்குமார் தலைமையில் அண்ணாநகர் முதல் புறவழிச்சாலை மேம்பாலம் வரை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது. ஆக்கிரமிக்கப்பட்ட கடைகளின் மேற்கூரைகளை நெடுஞ்சாலை துறை ஜேசிபி மூலம் அகற்றி அவர்களின் லாரிகளில் கொண்டு சென்றனர். இதில் கடைக்காரர்கள் அனைவரும் அமைதியாக இருந்த நிலையில் அதிமுகவின் முக்கிய பிரமுகர் என்று அவராலேயே சொல்லப்படுபவர். ஒரு இரும்பு கடை வைத்துள்ளார். அவர் காவல் துணை கண்காணிப்பாளரிடம் வாக்குவாதம் செய்தார். ஆனால் காவல் துணை கண்காணிப்பாளர் அதைப்பற்றியெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் தனது கடமையை திறம்பட செய்தார் என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

மேலும் நெடுஞ்சாலை துறையின் தொடர்ந்து ஆக்கிரமிப்புகளை கண்காணிக்க வேண்டும் என்று பொதுமக்கள் கருத்து தெரிவித்தனர். மேலும் மருத்துவக்கல்லூரி சாலை மற்றும் நாஞ்சிக்கோட்டை சாலை உழவர் சந்தையிலும் இதுபோன்ற ஆக்கிரமிப்புகள் உள்ளன. அவற்றையும் அகற்ற வேண்டும் என்பதே மக்களின் எண்ணம். அதிகாரிகள் கவனிப்பார்களா இல்லை போராட்டம் நடத்தியபிறகு பேச்சுவார்த்தை நடத்துவார்களா? என்று நம்மிடம் மக்கள் கருத்து தெரிவித்தனர்.





# மோசமான நிலையில் பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு பிரிவு அலுவலகம்...

## *தலைமை அதிகாரி EE வேல்முருகன் நடவடிக்கை எடுப்பாரா..?*

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் ஒட்டங்காட்டில் அமைந்துள்ளது பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு பிரிவு அலுவலகம். இந்த அலுவலக வளாகத்திற்குள் அமைந்துள்ள அலுவலர் குடியிருப்பு மற்றும் பழைய அலுவலகம் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இதன் கட்டிடங்கள் தற்போது வலுவிழந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது.

மேலும் புதர் மண்டி அச்சத்தை ஏற்படுத்தும் விதமாக காடு போல் காட்சியளிக்கிறது. இதில் பல விஷ பூச்சிகள் மற்றும் ஜந்துக்கள் இருந்தால் அது ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

மேலும் இவை அருகில் உள்ள பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் இருப்பதோடு, இந்த வளாகத்திற்குள் கொட்டப்பட்டு இருக்கும் குப்பைகள் மூலமாக துர்நாற்றம் ஏற்படுவதோடு இது போன்ற மழைக்காலங்களில் எளிதில் டெங்கு, மலேரியா போன்ற நோய் தொற்று ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான கொசு உற்பத்திக்கும் மிகச் சிறந்த சூழலாக உருவாகியுள்ளது.

நீர்வள ஆதார அமைப்பு பிரிவு அலுவலகம் வேலை மிக்க கடுமையான வேலைகளை செய்வதால் இதை கவனிக்க நேரமில்லை என்று கூறினால் இந்த அலுவலகத்தின் அருகே அமைந்திருந்த மிதியகுடி நீர் வாய்க்கால் கால்வாய் ஒன்றை காணவில்லை என்று நாம் இரண்டு வருடங்களுக்கு முன்பாக செய்திகள் வெளியிட்டிருந்தோம்.

மேலும் இந்த கால்வாய் தொடர்பாக உயர்மட்ட அதிகாரிகள் வரை சென்று எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் தற்போது வரை கிடப்பில் தான் உள்ளன பொது மக்களுக்காக பணி செய்யும் பொதுப்பணித்துறை பொதுவான அவர்களின் அலுவலகத்தையும் சுத்தமாக வைக்கும் பணியை செய்ய வேண்டும் என்பது இங்குள்ள பொது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

பட்டுக்கோட்டை உட்கோட்டம் அதிராம்பட்டினம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட மேலபழஞ்சுர் பகுதியில் வசித்து வரும் லைனல் ராஜசேகரன் என்பவரது வீட்டில் கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பனை செய்வதாக கிடைத்த ரகசிய தகவலின் படி பட்டுக்கோட்டை உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் ரவிச்சந்திரன் அவர்கள் மேற்பார்வையில் காவல் ஆய்வாளர் திரு.முருகேசன் அவர்கள் தலைமையிலான காவலர்கள் மேற்படி இடத்திற்கு விரைந்து சென்று சோதனை மேற்கொண்டதில் கள்ளச்சாராயம் காய்ச்ச வைத்திருந்த உபகரணங்கள், 40 litre F wash மற்றும் 2 Titre TD Arrack ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு குற்றவாளியான லைனல்ராஜசேகரன் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



### பட்டாவை சரி செய்து வழங்க கால தாமதம் ஏற்படுத்தியதால்

# காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலருக்கு ரூ5 லட்சம் அபராதம்...

## மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் தீர்ப்பு



பட்டாவை சரி செய்து வழங்க கால தாமதம் ஏற்படுத்தியதால், காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலருக்கு, ரூ5 லட்சம் அபராதம் விதித்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் அதிரடியாக தீர்ப்பு வழங்கியது. காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா வல்லம் கிராமத்தைச் சேர்ந்தவர் மனோகரன், தனது குடும்பத்திற்கு சொந்தமான 40 சென்ட் நிலம் தொடர்பான பட்டா ஆவணங்களில் பிழை ஏற்பட்டுள்ளதை அறிந்துள்ளார். வல்லம் கிராமத்தில் பல ஆண்டுகளாக அனுபவித்து வந்த தங்கள் நிலத்தின் பட்டாவை புதுப்பித்தல் பதிவேடு திட்டத்தின் கீழ் பக்கத்து நிலத்தின் உரிமையாளருக்கு கூடுதலாக தவறாக பதிவு செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து, அதனை சரி செய்ய வருவாய் துறை அதிகாரிகளிடம் விண்ணப்பத்த நிலையில் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.



நிலத்தின் பட்டாவை சரி செய்ய விண்ணப்பித்த நிலையில் வருவாய்த்துறையினர் அவரது தந்தையின் பெயரிலிருந்து பட்டாவையும் ரத்து செய்து விட்டனர். இதனால் பாதிக்கப்பட்ட மனோகரனுக்கு மன உளைச்சல் ஏற்பட்டதால் செங்கல்பட்டில் உள்ள மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் (நுகர்வோர் நீதிமன்றத்தில்) வழக்கு தொடர்ந்தார். இது தொடர்பான வழக்கு விசாரணை நடந்து வந்தநிலையில் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் பட்டா மாற்றம் செய்ய விண்ணப்பித்த மனோகரனுக்கு சாதகமாக தீர்ப்பு அளித்தது. அதன்படி, உரிய முறையில் பட்டா மாற்றம் செய்து தர வருவாய் துறை அலட்சியம் காட்டியதாகவும், சிக்கலை தீர்ப்பதற்கு தாமதப்படுத்தியதற்காக வருவாய் துறையே பொறுப்பேற்க வேண்டும் என்றும், வருவாய் துறையின் சேவையில் குறைபாடு இருப்பதாக கூறியது.

மேலும், துல்லியமான பதிவுகள் மற்றும் சரியான நேரத்தில் பதில்களை வழங்க ஒரு சட்டபூர்வமான அமைப்பான வருவாய்த்துறை கடமைப்பட்டுள்ளது என கூறியதோடு மட்டுமில்லாமல், சம்பந்தப்பட்டவரின் நிலத்தின் துல்லியமான அளவை பிரதிபலிக்கும் பட்டா அளவீடு செய்தும், அல்லது அதற்கு மாற்றாக நிலத்தின் சந்தை மதிப்புக்கு சமமான இழப்பீடு வழங்க வேண்டும், தாமதமாக செலுத்தும் இழப்பீடு தொகைக்கு 9% ஆண்டு வட்டியாகவும், 25 ஆயிரம் ரூபாய் வழக்கு செலவாகவும், வழங்கிட வேண்டும் என நுகர்வோர் குறைதீர் ஆணையம் தீர்ப்பு அளித்தது.

மேலும் தவறாக பதியப்பட்ட பட்டாவை மாற்றம் செய்து தராமல், காலம் தாழ்த்தியதோடு அலட்சியமாக நடந்து கொண்டதால் மனோகரனுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்காக 5 லட்சம் ரூபாய் வழங்க வேண்டும் என காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் அபராதம் விதித்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் உத்தரவு பிறப்பித்து உள்ளது. மாவட்ட வருவாய் அலுவலருக்கு அபராதம் விதித்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் தீர்ப்பளித்து உள்ள சம்பவம் காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் துறையினர் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# சோலார் விளக்கு வாங்கியதில் ரூ.3.72 கோடி ஊழல்

## பி.டி.ஓ.,க்கள் மீது வழக்குப்பதிவு

அ.தி.மு.க., ஆட்சியில், புதுக்கோட்டை மாவட்டத்தில் எட்டு ஊராட்சி ஒன்றியங்களில், 'சோலார்' விளக்குகள் வாங்கியதில், 3.72 கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதாக, பி.டி.ஓ.,க்கள் உட்பட, 11 பேர் மீது, லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே, கருக்காகுறிச்சியைச் சேர்ந்தவர் முருகானந்தம், 53. இவரது அண்ணன் ரவிச்சந்திரன், 55; தம்பி பழனிவேல், 50. இவர்களில் பழனிவேல், அ.தி.மு.க., மாவட்ட இளைஞர் அணி செயலராக உள்ளார்.

அ.தி.மு.க., ஆட்சியில், 2019 — 2020ல், இம்மாவட்டத்தில் உள்ள மணமேல்குடி, கந்தர்வக்கோட்டை, திருவரங்குளம், அறந்தாங்கி, அரிமளம், கறம்பக்குடி, குன்னாண்டார்கோவில், திருமயம் ஆகிய எட்டு ஊராட்சி ஒன்றியங்களில், தெருக்களில் பொருத்த சோலார் மின் விளக்குகள் வாங்கியதில் மிகப்பெரிய அளவில் ஊழல் நடந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதுகுறித்து, சென்னை லஞ்ச ஒழிப்பு துறை தலைமை அலுவலகத்தில், அந்த துறையின் டி.எஸ்.பி., மாயவரம்பன் புகார் அளித்துள்ளார். இதுகுறித்து, புதுக்கோட்டை மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் விசாரித்து வருகின்றனர்.

பழனிவேலுக்கு சொந்தமான நாகா டிரேடர்ஸ் மற்றும் முருகானந்தம் மனைவி காந்திமதி நடத்தி வரும் வீரா ஏஜென்சி, ஷேக் அப்துல்லா நடத்தி வரும் ஹெச்.எஸ்.பி., ஆகிய நிறுவனங்களில் இருந்து, சோலார் விளக்குகள் வாங்கப்பட்டுள்ளது விசாரணையில் தெரியவந்தது. அதாவது, 30 வாட்ஸ் ஒரு சோலார் விளக்கு, 10,952 ரூபாய்க்கு பதிலாக, 59,900 ரூபாய்க்கு கூடுதல் விலை கொடுத்து வாங்கப்பட்டுள்ளது.

அதன்படி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு, காந்திமதி, ஷேக் அப்துல்லா நிறுவனங்களிடம் இருந்து, 72 சோலார் விளக்குகள், 43 லட்சத்து 55,928 ரூபாய் கொடுத்து வாங்கப்பட்டுள்ளன.

இப்படி, எட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கும், 799 சோலார் விளக்குகளை, கூடுதல் விலைக்கு வாங்கி, 3.72 கோடி ரூபாய்க்கு மேல் ஊழல் செய்திருப்பதும், அதற்கு, பி.டி.ஓ.,க்கள் என்ற ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உடந்தையாக இருந்ததும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக, லஞ்ச ஒழிப்பு போலீசார், பழனிவேல், காந்திமதி, ஷேக் அப்துல்லா மற்றும் பி.டி.ஓ.,க்கள் அறந்தாங்கி சிவகாமி, அரிமளம் ஆயிஷாராணி, கறம்பக்குடி ரவி, திருமயம் சங்கர், கந்தர்வக்கோட்டை அரசமணி, மணமேல்குடி ரவிச்சந்திரன், குன்னாண்டார்கோவில் கலைச்செல்வி மற்றும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய கண்காணிப்பாளர் அசோகன் என, 11 பேர் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# தொண்டாமுத்தூர் காவல் நிலையப் பகுதிக்கு உட்பட்ட மல்லிகை நகரில் கஞ்சா பறிமுதல்..!



போதைக்கான சட்டவிரோத பயன்பாட்டை ஒழித்து, போதைப் பொருள் இல்லாத கோவையை உருவாக்கும் நோக்கில் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. K. கார்த்திகேயன் தலைமையில் காவல்துறையினர் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, 01.12.2024 அன்று தொண்டாமுத்தூர் காவல் நிலையப் பகுதிக்கு உட்பட்ட மல்லிகை நகர் பேருந்து நிறுத்தம் அருகே போலீசாரின் சோதனையில், கஞ்சா விற்பனை செய்ய விரும்பிய இரண்டு நபர்களை கைது செய்யப்பட்டது. ரகசிய தகவலின் அடிப்படையில், அவர்கள் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த அக்ஷய குமார் நாயக் மகன் பசந்தகுமார் நாயக் (32) மற்றும் அபய நாயக் மகன் ஹேமந்த் நாயக் (28) என்ற இருவரும் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து சுமார் 2 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த நடவடிக்கையை முன்னெடுத்த காவல் கண்காணிப்பாளர், போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் அதனை பரப்பும் செயலில் ஈடுபட்டவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எச்சரித்துள்ளார்.

மேலும், சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டவர்களைப் பற்றிய தகவல்களை பொதுமக்கள் எவரும் காவல்துறைக்கு அளிக்கலாம். கோவை மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண்: 94981—81212 மற்றும் வாட்ஸ் அப் எண்: 77081—00100 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும். தகவல்களை அளிக்கும் பொது அவர்களின் தனித்துவமான விவரங்கள் காப்பாற்றப்படும்.

---

தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவின் படி அனைத்து உட்கோட்ட காவல் பகுதிகளிலும் போதைப்பொருட்களுக்கு எதிராக தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் தஞ்சை நகர உட்கோட்டம் கிழக்கு காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட காந்திஜி சாலையில் தனியார் பேருந்தில் பெங்களூரிலிருந்து தஞ்சை அய்யம்பேட்டையைச் சேர்ந்த ராபர்ட் (வயது–32) என்பவர் குட்கா கடத்தி வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காவல் ஆய்வாளர் திரு.சுப்ரமணியன் அவர்கள் தலைமையிலான காவலர்கள் சோதனை மேற்கொண்டதில் 91 கிலோ குட்கா கைப்பற்றப்பட்டு குற்றவாளியான ராபர்ட் என்பவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



# தொடர் திருட்டில் ஈடுபட்ட நபர்களை கைது செய்த கோவை மாவட்ட காவல் துறையினர்...

கோவை மாவட்டம் பல்லடம் பகுதியில் வசிக்கும் முத்து ஜெயந்தி (46) என்பவர் கடந்த 14.11.2024 அன்று பொள்ளாச்சியில் நடைபெறும் உறவினர் திருமணத்திற்காக பல்லடம் பேருந்து நிலையத்திலிருந்து பஸ்ஸில் ஏறி பொள்ளாச்சி புதிய பேருந்து நிலையத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கி பார்த்தபோது அவரது பையிலிருந்த சுமார் 14 சவரன் தங்க நகைகளை அடையாளம் தெரியாத நபர்கள் திருடிச் சென்றது தெரியவந்து, மேற்படி சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபர் நெகமம் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.



ராமலிங்கம் (37)



கனகராஜ் (45)

மேற்படி திருட்டு வழக்கில் விரைந்து குற்றவாளிகளை கைது செய்ய, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.K.கார்த்திகேயன், இ.கா.ப., அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் தனிப்படை அமைக்கப்பட்டு புலன் விசாரணை மேற்கொண்டும், சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்தும், புலன்விசாரணை செய்து வந்த நிலையில், (03.12.2024) தனிப்படையினர் ஆனைமலை பகுதியைச் சேர்ந்த பழனிச்சாமி மகன் கனகராஜ் (45) மற்றும் பழனிச்சாமி மகன் ராமலிங்கம் (37) ஆகியோர்களை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் மேற்படி திருட்டு வழக்கில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டதன் பேரில், கனகராஜ் (45) மற்றும் ராமலிங்கம் (37) ஆகியோர்களை கைது செய்தும்,மேலும் மேற்படி நபர்கள் பொள்ளாச்சி கிழக்கு, பொள்ளாச்சி மேற்கு மற்றும் மகாலிங்கபுரம் காவல் நிலைய பகுதிகளில் திருட்டு வழக்குகளில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரிய வந்தது. இந்நிலையில் அவர்களிடமிருந்து மேற்படி வழக்குகளின் சொத்துக்களான சுமார் 28 ½ சவரன் தங்க நகைகள் மற்றும் ரூபாய் 50,000/— பணம் ஆகியவற்றை பறிமுதல் செய்தும், மேற்படி நபர்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

சட்டத்திற்கு புறம்பாக குற்ற செயல்களில் யாரேனும் ஈடுபட்டால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எச்சரித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.வந்திதா பாண்டே இ.கா.ப., அவர்கள் புதுக்கோட்டை மாவட்ட அனைத்து காவல் அதிகாரிகளுடன் சட்டம் ஒழுங்கு பணி தொடர்பான மாதாந்திர குற்ற ஆய்வுக் கூட்டம் (Monthly Crime Review Meeting) நடத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். குற்ற வழக்குகளில் சிறப்பாக பணிபுரிந்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்கள் மொத்தம் 38 நபர்களை (03.12.2024) நேரடியாக வரவழைத்து பாராட்டி நற்சான்றிதழ் வழங்கினார்கள்.

## பணி சிறக்க வாழ்த்துக்கள்...

திருப்பூர் மாநகரகாவல் கொங்குசரக (வடக்கு North) காவல் உதவி ஆணையராக பொறுப்பேற்றுள்ள M.வசந்தராஜ் BE.(ACP) அவர்கள் காவல் பணிசிறக்க நீதியின் நுண்ணறிவு இதழின் சார்பில் வாழ்த்துக்கள்...







# கொலை செய்த குற்றவாளியை விரைந்து செயல்பட்டு கைது செய்த புதுக்கோட்டை மாவட்ட காவல்துறையினர்....



புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி காவல் சரகத்திற்குட்பட்ட புளியஞ்சோலை கிராமத்தில் வீட்டில் தனியாக இருந்த பெண்ணை கொலை செய்த இடத்தை புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.வந்திதா பாண்டே இ.கா.ப., அவர்கள் பார்வையிட்டும், கொலை செய்த குற்றவாளியை விரைந்து பிடிக்க தனிப்படை அமைத்த நிலையில், டிஎஸ்பி கலையரசன், காவல் ஆய்வாளர் ரவி, உதவி ஆய்வாளர் மாதேஸ்வரன், குற்றப்பிரிவு உதவிஆய்வாளர் மாரிமுத்து ஆகியோர் கொண்ட தனிப்படை காவல்துறையினர் விரைந்து செயல்பட்டு 48 மணி நேரத்திற்குள் எதிரியை கைது செய்து அவரிடமிருந்து 2 கிராம் தங்க நகையை (கருகமணி) பறிமுதல் செய்து எதிரியை சிறையில் அடைத்தனர்.

---




# சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2025

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2025—ஐ முன்னிட்டு நடைபெற்ற முகாமில், புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், பாகம் 128 கீழத்தெருவில் உள்ள விண்ணப்பதாரரின் வீட்டிற்கு, வாக்காளர் பட்டியல் பார்வையாளர்/ எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி.வெ.ஷோபனா, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நேரில் சென்று களஆய்வு மேற்கொண்டு மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் ஆகியோருடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



# போலி சான்றிதழ் கொடுத்து அரசு பணியில் சேர்ந்த 78 பேர் டிஸ்மிஸ்

## நெல்லை மண்டலத்தில் பெரும் பரபரப்பு.




தென்காசி மற்றும் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள பேரூராட்சி மற்றும் நகராட்சிகளில் பணியாற்றி வந்த பலர் மாற்றுத்திறனாளி எனக்கூறி போலி சான்றிதழ் வழங்கி பணிக்கு சேர்ந்ததாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில், இது தொடர்பாக ஒருவர் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு ஒன்றையும் தொடர்ந்தார்.

இந்த வழக்கின் அடிப்படையில், உயர் நீதிமன்ற நீதிபதி இது தொடர்பாக விசாரணை நடத்த உத்தரவிட்ட நிலையில், குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு மருத்துவ பரிசோதனையானது நடைபெற்றது.

இந்த பரிசோதனையில் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் இல்லை என்பது தெரிய வரவே, இந்தப் பிரச்சினை தொடர்பாக தமிழக அரசு உரிய விளக்கம் அளிக்கவும், அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்பது குறித்து விளக்கம் அளிக்கவும் உயர் நீதிமன்ற நீதிபதி உத்தரவு பிறப்பித்த நிலையில், தற்போது தென்காசி மாவட்டத்தில் உள்ள புதூர், வடகரை, அச்சன்புதூர், கீழப்பாவூர், சிவகிரி, ராயகிரி, இலஞ்சி உள்ளிட்ட பேரூராட்சிகள் உள்பட நெல்லை, தூத்துக்குடி உள்ளிட்ட நெல்லை மண்டலத்தில் உள்ள பேரூராட்சிகளில் 78 பேர் மாற்றுத்திறனாளி எனக்கூறி போலி சான்றிதழ் கொடுத்து பணியாற்றி வந்த நிலையில், தற்போது பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பணி நீக்கமானது அந்தந்த பேரூராட்சி செயல் அலுவலர்கள் மூலம் அந்த பணியாளர்களுக்கு கொடுக்கப்பட்டதாக கூறப்படும் நிலையில், பல வருடங்களாக போலி சான்றிதழ் கொடுத்து அரசு பணியில் பணியாற்றி ஊதியம் பெற்று வந்த பலர் தற்போது டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ள சம்பவம் தென்காசி, நெல்லை, தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஃபெஞ்சல் புயல் பாதிப்பு...

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நிவாரணம் அறிவிப்பு!

ஃபெஞ்சல் புயலின் காரணமாக பாதிப்பு ஏற்பட்டுள்ள மாவட்ட மக்களுக்கு இழப்பீடு மற்றும் நிவாரண உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் நவம்பர் 30 முதல் வீசத் தொடங்கிய ஃபெஞ்சல் புயலின் காரணமாக பரவலான மற்றும் கடுமையான மழைப்பொழிவு தமிழ்நாட்டின் வடமாவட்டங்களில் பெறப்பட்டது. குறிப்பாக, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் இதன் தாக்கம் மிக அதிகமாக இருந்தது. திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி, ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளிலும் மழையின் அளவு வழக்கத்தைவிட மிக அதிகமாக இருந்தது.

இதுவரை இல்லாத அளவிற்கு பெரும் மழைப் பொழிவு ஏற்பட்டு, பொது மக்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.அதோடு, தமிழ்நாட்டின் வடமாவட்டங்களில் பெரும்பகுதி விளைநிலங்களை வெள்ளத்தில் மூழ்கடித்துள்ளது. அத்துடன், இந்த மாவட்டங்களில் பெரும்பாலான பகுதிகளில் சாலைகள், பாலங்கள், மின் கம்பங்கள், மின்மாற்றிகள், பொதுக் கட்டடங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளும் மற்றும் பொது மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. அங்கு ஃபெஞ்சல் புயலின் தாக்கத்தையும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளையும் நேரில் ஆய்வு செய்திட நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, பொது மக்கள் மற்றும் அலுவலர்களிடம் பாதிப்பு விவரங்களையும், மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்து, தேவையான அறிவுரைகளை வழங்கினார்.

மேலும் துணை முதலமைச்சர், அமைச்சர்களும் இம்மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இன்றும் நேரடியாகச் சென்று நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து துரிதப்படுத்தி வருகின்றார்கள். இந்நிலையில், (03.12.2024) தலைமைச் செயலகத்தில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்டங்களில் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு வரும் துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களை காணொலி வாயிலாகத் தொடர்பு கொண்டு தற்போதைய நிலையைக் கேட்டறிந்தார். அதன்பின்னர், ஃபெஞ்சல் புயல் மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் முதலமைச்சர் தலைமையில் இன்று (3—12—2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பின்வரும் நிவாரண உதவிகள் வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டது. புயல், வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 5 இலட்சம் ரூபாய் வழங்கிடவும்; சேதமடைந்த குடிசைகளுக்கு 10 ஆயிரம் வழங்கிடவும்; இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் வீடு கட்டுவதற்கு முன்னுரிமை அளித்திடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.




மழையினால் பாதிக்கப்பட்ட (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) நெற்பயிர் உள்ளிட்ட இறவைப் பாசனப் ரூபாய் 17

ஆயிரம் வழங்கிடவும்; பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு பல்லாண்டு பயிர்கள் மற்றும் மரங்கள் சேதமுற்றிருப்பின் (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) இழப்பீடாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 22,500 வழங்கிடவும்; மழையினால் பாதிக்கப்பட்ட (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) மானாவாரிப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.8,500 ஆக வழங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. எருது. பசு உள்ளிட்ட ரூ.37,500 ஆக வழங்கிடவும், கால்நடைகளின் உயிரிழப்பு நிவாரணமாக வெள்ளாடு, செம்மறி ஆடு உயிரிழப்பு நிவாரணமாக ரூ.4,000 வழங்கிடவும்: கோழி உயிரிழப்பு நிவாரணமாக ரூ.100 வழங்கிடவும்: அதி கனமழையின் காரணமாக கடுமையான மழைப்பொழிவினை சந்தித்துள்ள விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில், இரண்டு நாட்களுக்கு மேல் மழை, வெள்ளம் சூழ்ந்து, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக ரூபாய் 2 ஆயிரம் வழங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சான்றிதழ்கள், வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை, குடும்ப அட்டைகளை இழந்தவர்களுக்கு, சிறப்பு முகாம்கள் நடத்தி புதிய சான்றிதழ்கள் வழங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதிப்புக்குள்ளான குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு புதிய பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கிடவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். நிவாரணம் வழங்குவது தொடர்பாக தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டங்களில் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளின் விவரங்களை அரசுக்கு அனுப்பி வைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


RETIRE IN STYLE

DUCATZ FINSERV

Invest Small Amount regularly which can help you to achieve a sizeable corpus

| INVESTMENT FOR RETIREMENT FUND MONTHLY | INVESTMENT PERIOD | TOTAL INVESTMENT | RETIREMENT CORPUS |
|---|---|---|---|
| ₹10,000 | 30 | ₹36 Lakhs | 3.10 Crore |
| ₹10,000 | 40 | ₹48 Lakhs | 9.8 Crore |

Assumed return at 12% p.a



Mutual Fund investments are subject to market risks, read all scheme related documents carefully.

Srinivasan S
DUCATZ FINSERV
AMFI-Registered Mutual Fund Distributor
9952604444 | connect@ducatz.in
www.ducatz.in

2nd Floor,Platinum Jubilee Building,ACTC ,Anna University,Guindy,Chennai-25

# மழைக்காலங்களில் அவதிப்படும் சேதுபாவாசத்திரம் மீனவர் காலனி மக்கள்



சேதுபாவாசத்திரம் மீனவர் காலனி மக்கள் மழைக்காலங்களில் அவதிப்படுவதாகவும், மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டத்துக்குட்பட்ட, கிழக்கு கடற்கரை சாலையில் இருக்கும், சேதுபாவாசத்திரம் ஊராட்சி மீனவர்கள் அதிகம் வசித்து வரும் பகுதியாகும். இங்குள்ள மீனவர் காலனி கடலோரத்தை ஒட்டியுள்ளது.

இப்பகுதியில் மூன்று தெருக்கள் உள்ளன. பல்வேறு சமுதாய மக்கள் வசித்து வருகின்றனர். மழைக்காலங்களில் மூன்று தெருக்களிலும் சாலைகள், வீடுகளுக்குள் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதனால் பொதுமக்கள், குழந்தைகள் நடமாட முடியாத நிலை உள்ளது. சாலை அமைத்து பத்து வருடங்களுக்கும் மேலான நிலையில், கப்பிகள் பெயர்ந்து குண்டும் குழியுமாக உள்ளதால், மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நின்று இருசக்கர வாகனங்களில் செல்வோர் தடுமாறி விழுகின்றனர்.

எனவே புதிய தார்ச்சாலை அமைத்து தர வேண்டும். தண்ணீர் தேங்காமல் இருக்க, மழைநீர் வடிகால் வாய்க்கால் வசதி ஏற்படுத்த வேண்டும். கொசுக்கடி அதிகமாக இருப்பதால் புகை மருந்து அடிக்க வேண்டும். மின் விளக்கு வசதி ஏற்படுத்தி தர வேண்டும். குடிநீர் குழாய் அருகில் சாக்கடை தேங்கி நிற்பதால், குடிநீர் துர்நாற்றம் வீசுகிறது. எனவே பாதுகாப்பான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மேலும், 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சுனாமி குடியிருப்புகள் சேதமடைந்து வீடுகளுக்குள் தண்ணீர் கசிவதாகவும், மேற்கூரை சிமெண்ட் பூச்சு இடிந்து கீழே விழுவதால் அச்சத்துடன் வசிக்கின்றனர். சுவர்களில் தண்ணீர் கசிவதால், மின் இணைப்புகளுக்குள் தண்ணீர் புகுந்து அடிக்கடி மின்சாரம் கசிந்து ஆபத்து ஏற்படுவதாக தெரிவிக்கின்றனர்.

அரசு அலுவலர்கள் ஒவ்வொரு முறையும் மழைக்காலங்களில் வந்து பார்வையிட்டு, சாலையை அளந்து செல்வதோடு சரி, எந்த பணிகளும் நடைபெறுவதே இல்லை என்று கூறும் பொது மக்கள், ஊராட்சி மன்றத் தலைவர் வாக்கு கேட்டு வந்ததுதான். அதன்பிறகு எதற்குமே வருவதில்லை, எதையும் கண்டுகொள்வதில்லை என்றும் தெரிவிக்கின்றனர். குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சாலை வசதி அமைத்து தர வேண்டும். சுனாமி காலனி வீடுகளை இடித்துவிட்டு புதிதாக கட்டித் தர வேண்டும், அல்லது அரசு செலவில் பழுது பார்த்து தர வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



நாகப்பட்டினம் மாவட்ட காவல் அலுவலகத்தில் காவல் கண்காணிப்பாளர் திரு A.K. அருண் கபிலன் இ. கா. ப அவர்கள் பொதுமக்களை சந்தித்து அவர்ளின் குறைகளை கேட்டறிந்து 15 மனுக்களை பெற்றார்கள் பெறப்பட்ட மனுக்களுக்கு விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்கள். ஒவ்வொரு வாரம் புதன்கிழமை தோறும் மக்கள் குறை தீர்க்கும் மனு நாள் நாகப்பட்டினம் மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்கள். பொதுமக்கள் காவல்துறையிடம் தங்கள் குறைகளை நேரடியாக தெரிவிக்க உங்கள் எஸ்பியுடன் பேசுங்கள்: 8428103090 என்ற தொலைபேசி எண் மூலம் கள்ள சாராய விற்பனை கஞ்சா விற்பனை மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள பிரச்சனைகள் குறித்தும் புகார் தெரிவிக்கலாம் என்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள், காவல்துறையினர் கலந்து கொண்டனர்.

---



## தஞ்சையில் 8 லட்சம் மதிப்பிலான 50 காணாமல் போன கைபேசிகள் பொதுமக்களிடம் ஒப்படைப்பு

தஞ்சை மருத்துவக் கல்லூரி காவல் நிலையத்திற்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையம் மற்றும் மருத்துவக் கல்லூரி பகுதி போன்ற இடங்களில் பொதுமக்கள் தவற விட்டு கைபேசியை தஞ்சை மருத்துவக் கல்லூரி காவல் நிலைய காவல் ஆய்வாளர் திருமதி. சந்திரா தலைமையிலான காவல்துறையினர் உரிய நபர்களிடம் ஒப்படைத்தனர். பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சியில் தஞ்சை மாவட்ட காவல்துறையினருக்கு நன்றிகளை உரித்தாக்கி கொண்டனர்..

# மனநலம் பாதிக்கப்பட்ட ஒரு பெண்மணியை காப்பகத்தில் சேர்க்க உதவிய காவல்ஆய்வாளர்...





04, 12 2024 ஆம் தேதி காலை சுமார் 10 மணி அளவில் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம் அருகே ராஜாஜி சாலையில் கிழிந்த ஆடை உடுத்தி அங்கு சுற்றித் திரிந்து கொண்டிருந்த சுமார் 28 வயது மதிக்கத்தக்க மனநலம் பாதிக்கப்பட்ட ஒரு பெண்மணி திருமதி தேவி என்பவரை பி3 கோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு கருப்பையா சண்முகசுந்தரம் உதவி ஆய்வாளர் திரு குணசேகரன் மற்றும் காவலர் தாமோதரன், பெண் காவலர்கள் திருமதி ஹேமலதா மற்றும் செல்வி திவ்யா ஆகிய இவர்கள் மேற்படி பெண்ணை அழைத்து வந்து தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம் எதிரில் உள்ள பொதுமக்களின் ஒப்பனை அறையில் குளிக்கச் சொல்லி புது ஆடை அணிவித்து பின்னர் பி3 கோட்டை காவல் நிலைய ஆய்வாளர் திரு முகேஷ் ராவ் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் தமிழ்நாடு காவல்துறையின் காவல் கரங்கள் என்ற அமைப்பிற்கு தொடர்பு கொண்டு உதவிடக் கூறியதன் பேரில் அகல் பவுண்டேஷன் தொண்டு நிறுவனம் மூலமாக சென்னை பெருநகர மாநகராட்சி பெண்கள் மனநல காப்பகம் எழும்பூர் சென்னை 8 என்ற பராமரிப்பு இல்லத்திற்கு சிகிச்சைக்காக முறைப்படி பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பொதுமக்கள் சிலரும் காவல்துறையினருக்கு உதவியாக செயல்பட்டு மேற்கண்ட மனநலம் பாதிக்கப்பட்ட திருமதி தேவி என்பவரை மேற்படி அரசு காப்பகத்திற்கு அனுப்பி வைத்தனர்.

---





# எதிரிகளை கைது செய்து வழக்கின் சொத்துகளை மீட்டு சிறப்பாக பணியாற்றிய தனிப்படை காவல்துறையினர்

புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.வந்திதா பாண்டே இ.கா.ப., அவர்களின் உத்தரவின்பேரில் புதுக்கோட்டை மாவட்டத்தில் நமணசமுத்திரம், பனையப்பட்டி, கே.புதுப்பட்டி மற்றும் அறந்தாங்கி ஆகிய காவல் சரகத்தில் தொடர் வழிப்பறியில் ஈடுபட்ட எதிரிகளை பிடிக்க தனிப்படை அமைத்த நிலையில், தனிப்படை காவல்துறையினர் அதிரடியாக செயல்பட்டு வெவ்வேறு இடங்களில் வழிப்பறியில் ஈடுபட்ட 3 எதிரிகளை கைது செய்து அவரிடமிருந்து 27 பவுன் தங்க நகைகள் மற்றும் 3 இருசக்கர வாகனங்களை கைப்பற்றப்பட்டு எதிரிகளை சிறையில் அடைத்தனர். மேலும் எதிரிகளை விரைவாக பிடிக்க உதவியாக இருந்த தனிப்படையினரை புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரடியாக அழைத்து வெகுவாக பாராட்டினார்கள்...





விழுப்புரம் மாவட்டத்தில் ஃபெங்கல் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஆளில்லா விமானத்தை பயன்படுத்தி அணுக முடியாத பகுதிகளுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் வெள்ளம் காரணமாக திருவெண்ணெய்நல்லூர் அருகிலுள்ள மாரங்கியூர் கிராமத்திற்கு செல்லும் சாலை துண்டிக்கப்பட்டது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.தீபக் சிவாச்.,IPS அவர்களின் உத்தரவின்படி கிராம மக்களுக்கு பால் பாக்கெட்டுகள் மற்றும் உணவுகள் ட்ரோன் மூலம் வெற்றிகரமாக வழங்கப்பட்டது.



# திருச்சி அந்தநல்லூர் ஊராட்சியில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் : மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு

திருச்சி அந்தநல்லூர் ஒன்றியம் ஸ்ரீரங்கம் வாழை உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் செயல்பாட்டினை மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் செய்தியாளர்களுடன் சென்று பார்வையிட்டு பயனாளிகளுடன் கலந்துரையாடினார் நிகழ்வில் அந்தநல்லூர் ஒன்றியகுழு தலைவர் துரைராஜ் ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் சீனிவாசன் வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர் ஜெயபிரகாஷ் செயல் அலுவலர்கள் இளம் வல்லுனர்கள் தொழிற்சார்ந்த சமூக வல்லுநர்கள் மதி சிறகுகள் தொழில் மைய அலுவலர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர் .



# BHEL- நிறுவனத்தில் சைபர் குற்றங்கள் பற்றிய விழிப்புணர்வு

திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் வீ.வருண் குமார், இ.கா.ப., அவர்களின் உத்தரவின்படியும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. கோடிலிங்கம் (சைபர் கிரைம் பிரிவு) அவர்களின் அறிவுறுத்தலின்படியும் திருச்சி மாவட்ட சைபர் கிரைம் காவல் நிலையம் சார்பாக இன்று 03.12.2024 திருவெறும்பூரில் உள்ள BHEL— நிறுவனத்தில் சைபர் குற்றங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் இணையவழி நிதிமோசடி சம்பந்தப்பட்ட குற்றங்கள் பற்றியும், சமூக வலைதள குற்றங்கள் பற்றியும் அக்குற்றங்களிலிருந்து எவ்வாறு தங்களை தற்காத்துக் கொள்வது என்பது பற்றியும், வலைதளங்களை எவ்வாறு பாதுகாப்பாக உபயோகப்படுத்துவது என்பது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது மேலும், சைபர் கிரைம் சம்பந்தப்பட்ட புகார்களை பதிவு செய்யும் வலைதளம் www.cybercrime.gov.in மற்றும் இலவச சைபர்கிரைம் உதவி எண் 1930 பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நிறுவனத்தின் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் 450 பேர் கலந்து கொண்டனர்.

# காத்திருக்கும் ஓர் அன்னை!

நிலமாக விரிந்தேன்
கடலாக கிடந்தேன்
நெருப்பாக எரிந்தேன்
காற்றாக நிறைந்தேன்
ஆகாயமாக இருந்தேன்
உனக்காக..
நீயோ
நிலத்தை கூறிட்டாய்
நீரை கழிவாக்கினாய்
நெருப்பில் எனை பொசுக்கினாய்
காற்றை புகையாக்கினாய்
எல்லாம் ஒன்று சேர்ந்து
என் ஆகாயமோ காயமானது!
உன்னுடல் என் பஞ்சபூத அம்சமே!
உன்னுயிர் என்றும் என் வசமே!
ஆனாலும் என்னை மறந்தாய்!
உன் உடலோடு உலகையும்
செயற்கையால் வஞ்சித்தாய்!
அவ்வப்போது என் சீற்றத்தினால்
கண்டித்து நினைவூட்டுகிறேன்!
மறந்து கடந்து போகாதே!
உன் அகவுலகம் மாறினால்
என் புறவுலகம் மாறிடாதோ!
உன் அகம் அது அழகானால்
இப்புவியே சொர்கமாகாதோ!
உன் மனமாற்றத்திற்கு காத்திருப்பேன்
உன் இயற்கை அன்னையாக!



– மீனாட்சி வெங்கடேஷ்

# பத்திரப்பதிவு நாளிலேயே பட்டா மாறுதல்



பத்திரப்பதிவு நாளிலேயே, தானியங்கி முறையில், பட்டா பெயர் மாற்றம் செய்வதில், தமிழக பதிவுத்துறை மீண்டும் ஒரு அதிரடியை கையில் எடுத்துள்ளது.. இது பொதுமக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் தந்து கொண்டிருக்கிறது.

பொதுமக்களின் சிரமத்தை குறைக்கும் வகையில், தமிழக அரசு சார்பில் வீட்டு மனைபட்டாவுக்கு, "தமிழ் நிலம்" (htt—ps://tamilnilam.tn.gov.in), என்ற புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்பாட்டில் இருந்து வருகிறது.

அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகளுக்கான உட்பிரிவுகளை மொத்தமாக உருவாக்குதல், இந்த மனைகளுக்காக பட்டா மாற்றுதல் உள்ளிட்ட பணிகளுக்காவும், மாநகராட்சி மற்றும் நகராட்சியின் வருவாய் தொடர் பணிகளுக்காகவும் இந்த செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பத்திரம் பதிவு செய்யப்பட்ட சில நிமிடங்களில் தானியங்கி பட்டா மாறுதல் முறையில், வாங்கியவரின் பெயரில் பட்டா மாற்றப்படும்.

இதற்காக பொதுமக்கள் தனியா விண்ணப்பம் கொடுக்கவோ, அல்லது வட்டாச்சியர் அலுவலகத்திற்கு நேரில் வரவோ தேவையில்லை.

மேலும் இந்த செயல்முறை மூலம் தனியாக பட்டா வேண்டி விண்ணப்பம் செய்ய தேவையில்லை.

பட்டா வேண்டி மனைப்பிரிவு சார்ந்த பெறப்படும் மனுக்கள் பெருமளவு குறைவதுடன், அரசு நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்வதும் தடுக்கப்படும். அத்துடன் மோசடி செய்து நிலங்களை விற்பனை செய்வதும் வெகுவாக தவிர்க்கப்படும்.

தானியங்கி முறையில் பட்டா பெயர் மாற்றத்தில், உட்பிரிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லாத நில கிரையங்களில் பதிவுத்துறையில் பதிவு செய்யப்பட்டதுமே, பட்டா மாற்றம் தானியங்கியாக மேற்கொள்ளப்படுகிறது..

அந்தவகையில், தானியங்கி முறையில், பத்திரப்பதிவு விபரங்கள் அடிப்படையில், பட்டா பெயர் மாற்றும் திட்டம் அனைத்து தாலுகாக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது..

தானியங்கி முறை: பத்திரப்பதிவின்போது, சார் — பதிவாளர் நிலையில், இதற்கான சரி பார்ப்பு முடிந்ததுமே, தானியங்கி முறையில், பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிடும்..

பதிவுத்துறையில், "ஸ்டார் 2.0 சாப்ட்வேர்" வாயிலாக, சார் — பதிவாளர்கள் இதற்கான பணிகளை செய்யலாம்..

எனினும், சரிபார்ப்பு முடிந்தும், பட்டா பெயர் மாற்றம் நடக்கவில்லை என்று ஆங்காங்கே புகார்கள் எழுந்துவருகிறதாம்..

இதனை களையவே பதிவுத்துறை அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இதற்காகவே, தானியங்கி முறையில், பட்டா பெயர் மாற்ற பணிகளை, விரைவாக செய்ய வேண்டும் என்று நில அளவை மற்றும் நில வரி திட்டத் துறை இயக்குனர் சமீபத்தில் உத்தரவு ஒன்றையும் பிறப்பித்திருந்தார்..

இதன் அடிப்படையில், தானியங்கி பட்டா மாறுதல் பணிகளை கண்காணிக்க, சிறப்பு வசதி தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளதாம்.

பதிவுத்துறை: அதாவது, இதுவரை, தமிழ் நிலம் இணையதளத்தில், வருவாய்த் துறை அதிகாரிகள் மட்டுமே, இந்த விபரங்களை பெறக்கூடிய சூழல் இருந்த நிலையில், இப்போது பதிவுத்துறை அதிகாரிகளும், தினசரி எத்தனை பட்டாக்களுக்கு, தானியங்கி முறையில் மாறுதல்

செய்யப்பட்டது என்பதை பார்க்க முடியுமாம்.

ஒவ்வொரு சார் — பதிவாளர் அலுவலகத்திலும், கோப்புகள் நிலை என்ன என்பதை, பதிவுத்துறை அதிகாரிகளே நேரடியாக கண்காணிக்க முடியும்..

இதனால், பதிவுத்துறை நிலையில், பட்டா மாறுதலுக்கு எந்த தாமதமும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய முடியும் என்றும் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பத்திரப்பதிவு நாளிலேயே, தானியங்கி முறையில், பட்டா பெயர் மாற்றம் செய்வதை, தினசரி கண்காணிக்க, பதிவுத்துறை எடுத்துள்ள இந்த நடவடிக்கையானது பொதுமக்களின் கவனத்தை பெற்று வருகிறது.

பட்டா, சிட்டா பார்வையிட, சரிபார்க்க, பதிவேடு, புறம்போக்கு நிலவிவரம், புலப்படம்/ நகர நிலஅளவை வரைபடங்கள் ஆகியவற்றை இலவசமாக பார்வையிட, பதிவிறக்கம் செய்ய மற்றும் பட்டா மாறுதல் விண்ணப்ப நிலை விவரங்களை அறியும் இணையவழி சேவை www.eservices.tn.gov.in இணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலத்தில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளி முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவரும், தமிழ்நாடு அரசு நல வாரிய உறுப்பினர் ரெ.தங்கம் அவர்கள் தலைமையில் மாநில பொதுச் செயலாளர் பி சந்தானகிருஷ்ணன், துணை பொது செயலாளர் வாலாஜா க.குமரேசன், நிர்வாகிகளான கிருஷ்ணகுமார், ஹரிகணேஷ், பெரியசாமி, பிஆர்ஓ பா.சக்திவேல், PRO பட்டுக்கோட்டை வீர சரவணன், ஜோஸ்வா ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



---

## 5 உலக சாதனை விருதுகளை பெற்று சாதனை படைத்த 4 மாத சிறுமிக்கு தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டு

தென்காசியை சேர்ந்த தம்பதியினரின் லயா என்ற 7 மாத பெண் குழந்தையானது தனது 4 மாதத்தில் 5 உலக சாதனை விருதுகளை பெற்றுள்ளது. அந்த குழந்தையிடம் இரண்டு புகைப்படங்களை காட்டி அதில் உள்ள பெயர்களை சொல்லி எடுக்க சொல்லும்போது சரியாக எடுத்தும், உலக அதிசயங்கள், காய்கறிகள் உள்ளிட்ட பல்வேறு வகையான புகைப்படங்களை காண்பித்து குறிப்பிட்ட பெயரை சொல்லும் போது அந்த குழந்தை சரியாக கார்ட்டை எடுத்து சாதனை படைத்ததால் 4 மாத குழந்தையின் சாதனைக்கு அமெரிக்கா புக் ஆப் வேர்ல்ட் ரெக்கார்ட், நோபல் புக் ஆப் வேர்ல்ட் ரிக்கார்ட், வோர்ல்ட் வைட் புக் ஆஃப் ரிக்கார்டில் இரண்டு விருதுகள், இன்டர்நேஷனல் புக் ஆப் வேர்ல்ட் விருது உள்ளிட்ட ஐந்து உலக சாதனை விருதுகள் கிடைத்த நிலையில், அந்தக் குழந்தையை



தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V.R.ஸ்ரீனிவாசன் அவர்கள் நேரில் அழைத்து பாராட்டு தெரிவித்து சிறுமியின் நுண்ணறிவு திறனை மென்மேலும் வளர்க்கும் வகையில் சிறுமிக்கு உறுதுணையாக இருக்க சிறுமியின் பெற்றோருக்கு அறிவுரை வழங்கினார்.

# தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் 100 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னதத் திட்டத்தின் கீழ் 100 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் கடனுதவிக்கான ஆணைகள், தூய்மைப் பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீட்டு அட்டைகள், நரிக்குறவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள் ஆகியவற்றை வழங்கினார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கலந்துகொண்டு, தூய்மை பணியாளர்களுக்கான மருத்துவ முகாமினை துவக்கி வைத்து பார்வையிட்டு, தூய்மை பணியாளர்களுக்கான சமபந்தி விருந்தில் கலந்துகொண்டு உணவருந்தினார்கள்.

# புனித தோமையர்மலை பகுதியில் மளிகை கடை பூட்டை உடைத்து திருடிய 3 நபர்கள் கைது..!

சென்னை. ஆலந்தூர், பாளையத்தான் தெருவில் வசித்து வரும் ஆனந்த முருகன், வ/58, த/பெ.பால்துரை என்பவர் ஆலந்தூர், எம்.கே.என் ரோட்டில் மளிகை கடை நடத்தி வருகிறார். ஆனந்த முருகன் 12.11.2024ம் தேதி கடையை பூட்டிவிட்டு மறுநாள் (13.11.2024) காலை வந்து பார்த்தபோது, கடையின் பூட்டு உடைக்கப்பட்டு. கல்லாப்பெட்டியில் வைத்திருந்த ரூ.50,000/— மற்றும் வங்கி காசோலை திருடப்பட்டுள்ளது தெரியவந்தது.

இது குறித்து மளிகை கடையின் உரிமையாளர் ஆனந்த முருகன் S—1 புனித தோமையர் மலை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

S—1 புனித தோமையர்மலை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார் சம்பவயிடத்திற்கு சென்று தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட் 1.விக்கி (எ) விக்னேஷ் குமார். வ/21. த/பெ.சுடலை குமார். சௌந்தராஜன் நகர் மெயின் ரோடு, மடிப்பாக்கம், சென்னை 2.சந்தோஷ் (எ) வெள்ளை சந்தோஷ், வ/22. த/பெ.இம்மானுவேல், தர்கா கோயில் 2வது தெரு, எழும்பூர், சென்னை 3.சாவித்திரி, பெ/வ.31, க/பெ.ராஜேஷ். கண்ணகி தெரு, வானுவம்பேட்டை, சென்னை ஆகிய 3 நபர்களை கைது செய்தனர்.







அவர்களிடமிருந்து பணம் ரூ.20,300/— பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் (05.12.2024) நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.





# முன்விரோதம் காரணமாக வாய்க்காலை அடைத்து விவசாயம் செய்ய முடியாத அளவிற்கு பழி தீர்த்த நபர்கள்..

## ஏழை விவசாயி கண்ணீர் மல்க புகார்...

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள சென்னியவிடுதி கிராமத்தைச் சேர்ந்தவர் கருணாநிதி. இவர் ஏழை குறு விவசாயி. இவரது வயல் வெங்கரை கோட்டைக்காடு ஊராட்சியில் சென்னிய விடுதி சாலையோரம் உள்ளது. இவருக்கு சொந்தமான இந்த 70 செண்ட் நிலத்தில் வரும் நெல் விளைச்சலை கொண்டு தான் இவரது வாழ்வாதாரம் உள்ளது.

இந்த நிலையில் இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த மற்றொரு தரப்புக்கும் இடையே முன் விரோதம் இருந்து வந்த நிலையில் வயலில் தேங்கும் மழை நீர் வெளியேறும் வகையில் சாலை ஓரம் உள்ள வாய்க்காலை அதிரடியாக மண்ணடித்து அடைத்து விட்டதாகவும் இதனால் மழைநீர் நீண்ட நாட்களாக அந்த வயலிலேயே தேங்கி கிடப்பதால் கருணாநிதியால் விவசாயம் செய்ய முடியாத நிலை உள்ளது. இதனால் கடந்த குருவை சாகுபடி மற்றும் இந்த முறை சம்பா சாகுபடியும் செய்ய முடியாத நிலையில் கடந்த ஆறு மாதகாலமாக இவரது குடும்பம் எந்த வருமானமும் இல்லாமல் தவித்து வருகின்றனர். இந்த நிலையில் இந்த வாய்க்காலை அடைத்த நபர்கள் மீது நடவடிக்கை எடுத்து அந்த வாய்க்காலை சுத்தம் செய்து மீண்டும் தண்ணீர் வெளியேறும் படி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலமுறை அதிகாரிகளிடத்தில் புகார் கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே தனது வாழ்வாதாரத்தை காப்பாற்ற தன்னைப் பழி தீர்க்கும் வகையில் வயல் வாய்க்காலை அடைத்துள்ள நபர்கள் மீது நடவடிக்கை எடுத்து வாய்க்காலை மீண்டும் பழையபடி தண்ணீர் செல்லும் அளவிற்கு சீரமைத்து தர வேண்டுமென மாவட்ட ஆட்சியருக்கு கண்ணீர் மல்க கோரிக்கை வைத்துள்ளார்.

## தூத்துக்குடி மாநகராட்சி துணை கமிஷனர் பணியிட மாற்றம்!




தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகளில் பணிபுரியும் துணை கமிஷனர்கள் 7 பேர் நேற்று பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதன்படி தூத்துக்குடி மாநகராட்சி துணை கமிஷனர் ராஜாராம் நெல்லை மாநகராட்சிக்கும், ஈரோடு துணை கமிஷனர் சரவணகுமார் தூத்துக்குடிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல் வேலூர், கோவை, திருப்பூர், ஆவடி, தாம்பரம் துணை கமிஷனர்களையும் இடமாற்றம் செய்து தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் கார்த்திகேயன் உத்தரவிட்டுள்ளார்.

# பேராவூரணி வட்டார வளர்ச்சி அலுவலரின் அலட்சியம்... முடங்கிக் கிடக்கும் வளர்ச்சி திட்டங்கள்



## நடவடிக்கை எடுப்பாரா திட்டஇயக்குநர்..?

தஞ்சை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனராக திரு ஸ்ரீகாந்த் இந்திய ஆட்சி பணி அவர்களைத் தொடர்பு பணி ஏற்றுக் கொண்டவர் முனைவர் திரு பாலகணேஷ் அவர்கள். பொறுப்பேற்ற நாள் முதல் இந்த நாள் வரை அனைத்து நேரங்களிலும் தனது கடமைகளை சரிவர செய்து முடிக்க உண்டான ஆயத்த பணிகள் அனைத்தையும் மேற்கொள்ள தவறாதவர்.

தஞ்சை, கும்பகோணம், பாபநாசம், திருவையாறு, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை என்று தன்னால் இயன்றவரை அனைத்து இடங்களுக்கும் சென்று அந்தந்த வட்டாரத்தை நடைபெறும் பல்வேறு வட்டார வளர்ச்சி பணிகளை நேரில் ஆய்வு செய்து வருகிறார். ஆனால் இப்படி தஞ்சை மாவட்டத்தை சுற்றி பல இடங்களுக்கு ஆய்வுக்கு சென்றாலும் ஊழல் மிக்க பகுதியாக அடையாளம் காட்டப்படும் பேராவூரணி மற்றும் பட்டுக்கோட்டையில் உட்பகுதிகளில் பெரும்பாலான நேரங்களில் நேரில் சென்று ஆய்வு செய்யாமல் இருப்பது ஏன் என்பது நமக்கு இன்னும் சரியாக புலப்படவில்லை. இந்த அதிகாரிகளை இப்படித்தான் என்று எளிதாக கடந்து செல்லும் சாமானிய வெகுஜனம் போல சமூகத் தன்னார்வலர்களால் கடந்து செல்ல முடியவில்லை.

இது தொடர்பாக அவர்கள் நம்மிடம் எழுப்பிய கேள்வியின்போது தஞ்சைக்கு மிக அருகில் இருந்தால் மட்டும்தான் அடிக்கடி ஆய்வு செய்வார்களா? கடைக்கோடியில் என்ன நடந்தாலும் கண்டுகொள்ள மாட்டார்களா? என்று கூறியதும் தனக்கு பள்ளியின் மீது இதுவரை எந்தவித குறைபாடும் யாரும் கூற முடியாது நிலை நோக்கி பணியாற்றி வரும் திரு பாலகணேஷ் அவர்கள் பேராவூரணி ஊராட்சியை கவனத்தில் கொண்டு இருப்பாரா என்று நமக்கே சந்தேகம் வரத்தான் செய்கிறது. ஏனென்றால் 100 நாள் வேலை பணி திட்டத்தில் ஊழல், இலவச வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக ஊழல் ஊராட்சி பணிகளில் பணியாளருக்கு சம்பளம் தருவதில் பிரச்சனை என்று தொடர்ந்து ஊராட்சி தொடர்பான பல புகார்கள் வெளிவந்துள்ளன.

மேலும் பேராவூரணி வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு உட்பட்ட ஒட்டங்காடு ஊராட்சி, நவக்கொல்லைக்காடு கிராமத்தில் சாலை வசதி, குடிநீர், மயானம் என்று பல அடிப்படை வசதிகள் முழுமையாக கிடைக்க பெறாமல் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இது தொடர்பாக நாமே ஒரு முறை அவரை நேரில் சந்தித்திருக்கிறோம் இருக்கணும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு கடிதம் அனுப்பப்படுவதோடு பல நேரங்களில் அந்த வேலைகள் கடிதங்களாகவே இருக்கின்றன.

தஞ்சைக்கு மிக அருகில் உள்ள பகுதிகளான பாபநாசம், கும்பகோணம் போன்ற பகுதிகளில் நேரடி திடீர் ஆய்வில் ஈடுபடும் திரு பாலகணேஷ் அவர்கள் அவரின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பேராவூரணி போன்ற கடைகோடிக்கு உட்பட்ட கிராமங்களிலும் வட்டார வளர்ச்சி திட்டங்களை நேரடியாக ஆய்வு செய்ய வேண்டும். அப்போதுதான் கொஞ்சமாவது ஊழல்வாதிகள் பயப்படுவார்கள் என்பது பல பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாக நம்மால் அறியப்படுகிறது.

பாரபட்சம் பார்க்காமல் வேலை செய்பவராக இருந்தாலும் ஒருவேளை பாரபட்சமாக இருக்குமோ என்று பொதுமக்களிடம் எழுந்திருக்கும் எண்ணத்திற்கு திரு பாலகணேஷ் அவர்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே நமது எதிர்பார்ப்பாகவும் உள்ளது. கடைக்கோடியை கண்டு கொள்வாரா பாலகணேஷ் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா குவிந்து கிடக்கும் ஊழல் குற்றச்சாட்டுகள் மீது விரைவில் பதில் கிடைக்கும் என்று நம்புவோம்.




# துப்பாக்கி சுடும் போட்டியில் பதக்கம் வென்றவர்களுக்கு காவல்ஆணையர் வாழ்த்து!

சென்னை ரைபிள் கிளப் (CHRC) 1952 ஆம் ஆண்டு சென்னை நகரில் விளையாட்டுத்திறன். ஒழுக்கம். தன்னம்பிக்கை மற்றும் தற்காப்பு உணர்வை உருவாக்கும் நோக்கத்திற்காக சில உறுப்பினர்களுடன் உருவாக்கப்பட்டது. ரைபிள் கிளப் அதன் பொன்விழாவை 2003 ஆம் ஆண்டு கொண்டாடியது. கிளப்பின் மொத்தம் உறுப்பினர்களின் எண்ணிக்கை 500 ஆகும். புரவலர் உறுப்பினர்கள். வாழ்நாள் உறுப்பினர்கள், ஆண்டு உறுப்பினர்கள் மற்றும் இளைய உறுப்பினர்கள் (பெண் உறுப்பினர்கள் உட்பட) என நான்கு வகை உறுப்பினர்களாக உள்ளனர்.

சென்னை ரைபிள் கிளப் 2 துப்பாக்கி சுடும் வரம்புகளைக் கொண்டுள்ளது. ஒன்று எழும்பூரில் ரைபிள் மற்றும் பிஸ்டல் நிகழ்வுகளுக்காகவும் மற்றொன்று நிகழ்வுகளுக்காகவும் உள்ளது. இந்த கிளப் தனது சாதனைகளுக்காக மதிப்புமிக்க அர்ஜுனா விருதைப் பெற்ற திருமதி ரூப ஸ்ரீநாத் உன்னிகிருஷ்ணன் மற்றும் தென் கொரியாவில் நடைபெற்ற ஆசிய அளவிலான துப்பாக்கி சுடுதல் போட்டியில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கம் வென்ற திரு.பிரித்விராஜ் தொண்டைமான் உட்பட பல தேசிய மற்றும் சர்வதேச துப்பாக்கி சுடும் வீரர்களை உருவாக்கியுள்ளது. சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள் இந்த சென்னை ரைபிள் கிளப்பின் தலலவர் ஆவார் கூடுதல் ஆணையாளர் (தலைமையிடம்) அவர்கள் துணைத்தலைவர் ஆவார். தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர். இணைச் செயலாளர், பொருளாளர் மற்றும் 9 செயற்குழு உறுப்பினர்களால் ரைபிள் கிளப் நிர்வகிக்கப்படுகிறது.

2024ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பொதுக்குழு கூட்டம் (AGM) (07.12.2024) வேப்பேரி, காவல் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. சென்னை ரைபிள் கிளப்பின் தலைவரும். சென்னை பெருநகர காவல் ஆணையாளருமான திரு.A.அருண், இ.கா.ப. அவர்கள் தலைமையில் ரைபிள் கிளப்பின் துணைத் தலைவர், கூடுதல் ஆணையாளர் (தலைமையிடம்) திரு.கபில் குமார் சி சரட்கர். இ.காய, செயலாளர் திரு.கே.ராஜசேகர், இணைச் செயலாளர் திரு.பாலாஜி தயாளன். பொருளாளர் திரு.சிபிராஜேஷ், மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். சென்னை ரைபிள் கிளப்பின் தலைவர் திரு.A.அருண், இ.கா.ப அவர்கள் கூட்டத்தில் உரையாற்றி. கிளப் உறுப்பினர்கள் அனைவராலும் பெரிதும் பாராட்டப்பட்ட துப்பாக்கி சுடும் விளையாட்டின் வளர்ச்சிக்கு தனது ஆதரவு இருக்கும் என்று உறுப்பினர்களுக்கு உறுதியளித்தும். கிளப்பின் வளர்ச்சிக்கு உறுப்பினர்களின் யோசனைகளையும் கேட்டறிந்தார். 2023—2024 ஆம் ஆண்டிற்கான கிளப்பின் செயல்பாடுகள் செயலாளரால் முன்வைக்கப்பட்டது. மேலும் இக்கூட்டத்தில் சென்னை ரைபிள் கிளப் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 500—லிருந்து 1000 உறுப்பினர்களை கொண்டதாக உயர்த்துவது

என்று ஆலோசிக்கப்பட்டது.

இக்கிளப்பில் உறுப்பினராக உள்ள செல்வி.S.எழிலரசி அவர்கள் 2024ம் ஆண்டு மே மாதம் புது டில்லியில் நடைபெற்ற பல்கலைக்கழகங்களுக் கிடையேயான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். மேலும் ஏற்கனவே தென்கொரியாவில் நடைபெற்ற ஆசிய அளவிலான சாம்பியன்ஷிப் துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கம் வென்ற பிரித்விராஜ் தொண்டைமான் தற்போது உலகளவில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டு போட்டியில் இந்தியா சார்பாக தேர்வாகி கலந்து கொண்டு தமிழ்நாட்டிற்கும், சென்னை ரைபிள் கிளப்பிற்கும் பெருமை சேர்த்தமைக்காக ரைபிள் கிளப் தலைவரும், சென்னை பெருநகர காவல் ஆணையாளருமான திருA.அருண், இ.கா.ப அவர்கள் அவரை வெகுவாக பாராட்டி நினைவு பரிசு வழங்கினார்.

2023—2024—ஆம் ஆண்டிற்கான சென்னை ரைபிள் கிளப் பெண் உறுப்பினர்களுக்கிடையே



நடந்த துப்பாக்கி சுடுதல் போட்டியில் பதக்கம் வென்ற மீரா ஜெகதீஷ், கங்கா பிரியா வேணுகோபால் மற்றும் ஆண்கள் பிரிவில் பதக்கம் வென்றவர்களையும். ரைபிள் கிளப் தலைவரும், சென்னை பெருநகர காவல் ஆணையாளருமான திரு.A.அருண். இ.கா.ப அவர்கள் வெகுவாக பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.

# கரூர் மாவட்டத்தில் திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் G கார்த்திகேயன் IPS அவர்கள் ஆய்வு

2024, டிசம்பர் 7, திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் G கார்த்திகேயன் IPS அவர்கள் கரூர் மாவட்ட காவல் தனிப்பிரிவு அலுவலகத்தில் வருடாந்திர ஆய்வை மேற்கொண்டார். இந்த ஆய்வு நடவடிக்கைகள், மாவட்ட காவல்துறை செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும், குற்றச்செயல்களை தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உதவுவதாக இருந்தது. ஆய்வின் போது, திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் அதிகாரிகளுக்கு பல்வேறு வழிகாட்டுதல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்கினார். அவர் அதிகாரிகளுக்கு, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான முக்கியமான நடவடிக்கைகள் மற்றும் அவசர சூழ்நிலைகளில் எடுக்க வேண்டிய பரிந்துரைகள் குறித்து குறிப்பிட்டார். மேலும், காவல்துறையின் செயல்திறனை உயர்த்துவதற்கான புதிய யோசனைகள் மற்றும் திட்டங்களை அவர் எடுத்துரைத்தார்.



இந்த ஆய்வில், கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K பெரோஸ் கான் அப்துல்லா அவர்கள் உடனிருந்தார். இந்த ஆய்வு, கரூர் மாவட்டத்தில் காவல் அமைப்பின் பணிகளை மேலும் நுட்பமாக மேம்படுத்துவதை நோக்கி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு, காவல்துறை செயல்பாடுகளின் பிழைகள், திறன், மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு மேம்பாட்டில் நிச்சயமாக ஒரு முக்கியமான அங்கமாக விளங்கும்.

# “நான் கடந்து வந்த பாதை...”

## டிஎஸ்பி சுபாஷ் சந்திரபோஸ்



திருவாரூர் மாவட்டம் திருத்துறை பூண்டி தாலுகா இராயநல்லூர் கோட்டகம் விவசாய மண்ணாய் விளை நிலங்களை பசுமை மாறாத அழகிய கிராமம். பாடுபட்டு உழைத்து சாப்பிட்டு வாழ்பவர்களின் தொங்கும் தோட்டம். அவ்வூரில் அன்றாடம் உழைத்து ஐந்து குழந்தைகளை பெற்று ஏழ்மையில் உழன்று எங்கள் எல்லோரையும் வாழவைத்த பெற்றோர் சின்னையன் தங்கம்மாள். ஐந்து பிள்ளைகளில் நடுப்பிள்ளை நான். அவ்வூரில் எனக்கு முன்பு படித்தவர்கள் யாரும் இல்லை.

ஐந்து வயது ஆனவுடன் அப்பா சிலேட்டு குச்சி, அரிச்சுவடி, சிலேட்டு ஆகியவற்றை ஒரு மஞ்சப்பையில் வைத்து என்னையும் அழைத்து அரசு ஆரம்பப்பள்ளி இராயநல்லூரில் கைப்பிடித்து அழைத்து கன்னத்தில் ஒன்று கொடுத்து பள்ளியில் சேர்த்தார். 1 முதல் 5 வரை அங்கே படித்தேன். அப்பள்ளியில் ஒரு பெரிய வாதா மரம் இருந்தது. மதிய உணவுக்கு அதன் உதவி அதைவிட பெரியது.

6லிருந்து 8 வரை இராமகிருஷ்ணா நடுநிலைப்பள்ளி இராயநல்லூரில் சேர்ந்தேன். அப்போது உள்ள ஆசிரியர்கள் பேசி, ஷேக், சாமியப்பா, சாமிநாதன், மகாலிங்கம், இராமநாதன், சோமசுந்தரம் போன்றவர்களின் ஆளுமையில் படிப்பு என்ற பரிசு எனக்கு கிடைத்தது. இடைஇடையே என் தந்தை வேலைக்கு அழைத்து செல்வார். சளைக்காமல் வேலை செய்வேன். இளமையில் படிக்கும் எண்ணமும் கழனி வேலைகளையும் என் பெற்றோர்கள் எனக்கு கற்று தந்தனர். எனது அண்ணன், தம்பி, அக்கா, தங்கை யாரும் படிக்கவில்லை. அதேபோல வாழ்ந்த கிராமத்திலும் யாருமே படிப்பதற்கு ஆர்வமில்லாமல் இருந்தனர். காரணம் ஏழ்மையின் சீற்றம். அன்றாடம் வயல் வேலைக்கு செல்வது அதில் வரும் காசை வைத்து அரிசி வாங்கி சமைத்து சாப்பிடுவது இதில்தான் கவனம் அதிகம் இருந்ததால் குழந்தைகளை வழிநடத்தும் நேரங்கள் பெற்றோர்களுக்கு கிடைப்பதில்லை. அக்காலத்தில் நாங்கள் பஞ்சத்தில் வாழ்ந்தாலும் எனக்கு படிப்புக்கு வழிநடத்திய எனது தாய் தந்தையரே என் முதல் கடவுள். 9 லிருந்து 12 வரை கோட்டூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் அப்பா சேர்த்தார். படித்துக் கொண்டே கூலி வேலைகளும் செய்து குடும்ப கஷ்டத்திலும் சேர்ந்தேன்.



10வது படிக்கும் போது கணக்கில் தோற்றேன். அவ்வளவு வறுமையில் அப்பா, அம்மா என்னை விடவில்லை. திருத்துறைபூண்டி வாசன் டுடோரியலில் சேர்த்து படிப்பின் அருமையை புரிய வைத்தார்கள். பத்மநாபன் கணக்கு ஆசிரியர் எனது கல்வி வாழ்க்கையின் திருப்புமுனை என்று சொல்லலாம். அதன்பிறகு எனது படிப்பை யாரும் தடைபடுத்த முடியவில்லை. கணக்கில் வென்றேன். அதே பள்ளியில் 11வது சேர்ந்தேன். அப்போது அப்பாவிடம் 35 ரூபாய் கட்டி சேர்க்கிறீர்களா 105 ரூபாய் கட்டி சேர்க்கிறீர்களா என்று கேட்ட தலைமை ஆசிரியர் KVN அவர்களிடம் அப்பா பச்சை பெல்ட்டில் இருந்த 35 ரூபாயை எடுத்து கொடுத்து சேர்த்தார்.

12 வது வரை படிப்பில் வெற்றி வாகை சூடினேன். அப்பா, அம்மாவுக்கு வயல் வேலையிலும் உதவி செய்தேன். இளங்களை புவியியல் குடந்தையில் சேர்ந்தேன். அப்பா கடைசிவரை

கல்லூரி வரை சேர்த்துவிட்டு கைகூப்பி பேராசிரியரை வணங்கி என் பையன் நல்லா படிப்பான். அவனுக்கு நல்வழி காட்டுங்கள் என்று சொல்லிவிட்டு சென்ற அந்த காட்சி இன்னும் ரத்த ஓட்டமாக செய்கிறது. விக்டோரிய ஜூபிளி விடுதியில் தங்கி மூன்று வருடங்கள் அரசு ஆடவர் கல்லூரியில் படித்தேன். ஆப்பிரிக்க புவியியல், தமிழ்நாடு புவியியல் இரண்டிலும் பல்கலைகழக முதலிடம் பெற்றேன். MSc Geography என் கல்லூரிக்கு வந்தது. அந்த வருடம் கொலைச் சம்பவம் நடந்ததால் எனக்கு மேல்படிப்பு கிடைக்காமல் தடைபட்டது. அப்போதுள்ள பேராசிரியர்கள் பீதாம்பரம், குமாரசாமி, காமராஜ், தமிழ்செல்வன் ஆகியோர் வழிகாட்டுதலின் படி மதுரை காமராஜ் பல்கலைகழகத்தில் சேருவதற்கு சொன்னார்கள். பொருளாதார நெருக்கடியில் தங்கையில் மூக்குத்தியை திருத்துறை பூண்டியில் விற்று மதுரை சென்று விண்ணப்பம் பூர்த்தி செய்து கொடுத்துவிட்டு வந்தேன். அடுத்தவாரமே சேர்வதற்கு ஆணை வந்தது. அப்போது பணம் இல்லை. ஒரு பெரிய மனிதரை நம்பினேன். அவர் ஏமாற்றி விட்டார். படிப்பு தடைபட்டது. பெற்றோர்கள் கண்ணீர் சிந்தினர். விவசாய வேலைகள் தொடர்ந்தது. ஒருநாள் பக்கத்து வீட்டு அண்ணன் ராகவீர் தஞ்சை வேலைவாய்ப்பு அலுவலகம் அழைத்தார். பஸ்ஸீக்கு பணம் இல்லை என்றேன். அவர் போட்டு அழைத்து சென்றார்.




தஞ்சை ஆத்துபாலம் அருகே செல்லும் போது தஞ்சை ஆயுதப்படையில் காவல்துறைக்கு ஆட்கள் எடுத்து கொண்டிருந்தார்கள். தலைவிதி அழைத்து சென்றது. மனசு மாறியது. காவல்துறைக்கு சேர்வதற்கு உள்ளே நுழைந்தேன். 6000 பேர்கள் இருந்த மைதானத்தில் 5வதாக தேர்ச்சி பெற்றேன். ஒவ்வொரு நாளும் அம்மா கொடுத்த 10ரூபாய் என்னை ஆளாக்கியது. போலீஸ் பயிற்சிக்கு பாளையங்கோட்டை அனுப்பி வைத்தார்கள். அம்மாவுக்கு கேன்சர் தொற்றிக் கொண்டது. பயிற்சியின் போது அம்மா இறந்தார்கள். பயிற்சி முடித்து தஞ்சை ஆயுதப்படையில் சேர்ந்தேன். வாழவைத்த அம்மாவின் போட்டோ கிடைக்கவில்லை. கைகொடுத்த மனைவியை கரம் சேர்ந்தேன். கடைசி தங்கைக்கு திருமணம் செய்து வைத்தேன். சிக்கலில் இருந்த என் தம்பிக்கு அவனுக்கு பிடித்த மனைவியை துணை சேர்த்தேன். 10 ஆண்டுகாலம் காவலராய் பணி செய்தேன். கண்டேன் முத்துக்களாய் மூன்று குழந்தைகள்.

1997லே நேரடி உதவி ஆய்வாளர் தேர்வில் கலந்து தஞ்சையிலே 86 பேர்களில் முதலாவதாக தேர்ந்தேன். பயிற்சி வீராபுரம். ஓராண்டு முடிந்து பேராவூரணியில் 6 மாத காலம் பயிற்சி உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். நேரடி உதவி ஆய்வாளராய் திருவள்ளூர் மாவட்டத்திற்கு அனுப்பி முதல் பணி முருகன் அருளாய் திருத்தணி உதவி ஆய்வாளராய் சுழன்று வந்தேன். அதன்பிறகு செவ்வாய்பேட்டை, பள்ளிப்பட்டு, மீனம்பாக்கம் விமானநிலையம் போன்ற இடங்களில் பணி செய்து திரும்ப தஞ்சை மாவட்டம் வந்தேன். அதன்பிறகு பூதலூர், பட்டுக்கோட்டை மதுவிலக்கு பிரிவு, திருச்சிற்றம்பலம் நெடுஞ்சாலை ரோந்து, கள்ளிப்பெரம்பூர் ஆகிய காவல்நிலையங்களில் உதவி ஆய்வாளராய் இருந்து அதன்பிறகு பணி உயர்வு பெற்று அம்மாபேட்டை PS—ல் காவல் ஆய்வாளராய் சேர்ந்தேன். பின்பு திருவெண்காடு, தஞ்சை குற்றப்பிரிவு, நடுக்காவேரி, வேதாரண்யம், தஞ்சாவூர் தெற்கு , குடிமை பொருட்கள் வழங்கல் குற்ற புலனாய்வு துறை, கடலோர காவல் குழுமம் பட்டுக்கோட்டை, தலைஞாயிறு ஆகிய காவல் நிலையங்களில் காவல் ஆய்வாளராய் பணிபுரிந்து பதவி உயர்வு DSP உயர்ந்து தஞ்சை மாவட்ட குற்ற பதிவு கூடத்தில் சேர்ந்து பணிபுரிந்ததும் திருச்சி சமூகநீதி மற்றும் மனித உரிமை பிரிவில் மாறுதலில் சென்று பணிபுரிந்தும் அதன்பிறகு வேதாரண்யம் உட்கோட்ட DSP யாக பொறுப்பேற்றேன். அதன்பிறகு நாகப்பட்டினம் மாவட்ட குற்றப்பிரிவில் மாறுதலாகி பணிபுரிந்து மீண்டும் வேதாரண்யம் உட்கோட்ட DSP யாக பொறுப்பேற்று நல்ல நிலையில் பணிபுரிந்து 37 ஆண்டுகள் நிறைவடைந்து 31.12.2024ல் பணி ஓய்வு பெறும் நிலையில் இருந்து வருகிறேன்.

கஷ்டங்களை கண்டு துவண்டு இருந்தால் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது. நான் பணிபுரிந்த காலத்தில் பல்வேறு வழக்குகளை கண்டுபிடித்து உயர்அதிகாரிகளிடம் பல்வேறு சான்றுகள் பெற்று பாராட்டுகளை பெற்றுள்ளேன். சுபாஷ் சந்திரபோஸ் என்ற பெயருக்கு சிறு களங்கமும் இல்லாமல் காவல்பணியும் சரி, குடும்ப பணியும் சரி சின்ன நெருடல் கூட இல்லாமல் வறுமையை தாண்டி, ஏழ்மையை தாண்டி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மந்திரத்தை மனதில் வைத்து பசியை போக்க பாடுபட்டு உழைத்து மனநிறைவோடு விடைபெறுகிறேன்.

நன்றி.!

# அரசு கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.152 கோடி நிதி ஒதுக்கீடு

## உயர்கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன்

பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாடு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள அரசு கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.152 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் கோ.வி. செழியன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—



தமிழ்நாடு முதல்—அமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் உயர்கல்வித்துறைக்கென்று பல்வேறு திட்டங்களை தொடர்ந்து வழங்கி வருகிறார். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசு கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட 2022—ம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளுக்கு ரூ.1,000 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 2022—2023 மற்றும் 2023—2024ம் ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு அரசுக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

2024—2025ம் ஆண்டிற்கு 31 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 12 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 6 அரசு பொறியியல் கல்லூரிகளுக்கு தேவையான ஆய்வகங்கள், வகுப்பறைகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.152,96,83,000/— நிதி ஒப்பளிப்பு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

சென்னை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி, ராணி மேரி கல்லூரி, கோவை, திருப்பூர், தருமபுரி, நீலகிரி, சேலம், அரியலூர், முசிறி, செங்கல்பட்டு, கடலூர் (பெரியார் கலைக்கல்லூரி, திருகொளஞ்சியப்பர் கலைக்கல்லூரி), விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, வேலூர் ஆகிய பகுதியிலுள்ள அரசு கலைக் கல்லூரிகளிலும், கோவை தொண்டாமுத்தூர், நீலகிரி, கூடலூர், குமாரபாளையம், வேடசந்தூர், வீரபாண்டி, கடலாடி, நன்னிலம், திருத்துறைப்பூண்டி, நாகர்கோவில், புதுக்கோட்டை, திருச்சி தந்தை பெரியார் கலை அறிவியல் கல்லூரி, வேலூர் மற்றும் விழுப்புரத்தில் உள்ள புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆகிய பகுதிகளிலுள்ள அரசு கலை அறிவியல் கல்லூரிகளிலும், சேலம், கொடைக்கானல், சிவகங்கை, கும்பகோணம், தஞ்சாவூர் ஆகிய பகுதிகளிலுள்ள அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரிகளிலும் என 31 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தேவையான ஆய்வகங்கள், வகுப்பறைகள், மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கு ரூ. 100.15 கோடி நிதி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் 2024—2025ம் ஆண்டிற்கு வேலூர், திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சென்னை மண்டலங்களிலுள்ள

12 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 6 அரசு பொறியியல் கல்லூரிகளுக்கு தேவையான ஆய்வகங்கள், வகுப்பறைகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.52.8183 கோடி நிதி தமிழ்நாடு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு அரசு தொழில்நுட்ப கல்லூரி, கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர், வேலூர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா, ஊத்தங்கரை அப்பிநாயக்கன்பட்டி, அரியலூரில் உள்ள கீழப்பழூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை, கோயம்புத்தூர், மதுரை மாவட்டம் மதுரை, உசிலம்பட்டி, திருமங்கலம், சென்னை குரோம்பேட்டை, தரமணி ஆகிய பகுதிகளில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம், திருநெல்வேலி, சேலம், ஈரோடு, தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்காசி மாவட்ட காவல் அலுவலகத்தை ஆய்வு மேற்கொண்ட காவல்துறை தலைவர் அவர்கள்




தென்காசி மாவட்ட காவல் அலுவலகத்தில் இயங்கி வரும் மாவட்ட குற்ற ஆவண காப்பகம், மாவட்ட குற்றப்பிரிவு மற்றும் அனைத்து இதர பிரிவுகளிலும் பராமரிக்கப்பட்டு வரும் கோப்புகள் மற்றும் பதிவேடுகளை தென் மண்டல காவல்துறை தலைவர் திரு. பிரேம் ஆனந்த் சின்கா இ.கா.ப அவர்கள் வருடாந்திர ஆய்வினை மேற்கொண்டு அவர்களுக்கு அறிவுரை வழங்கி அனைத்து கோப்புகளையும் சரிவர முறையாக பராமரித்து வந்த காவல்துறையினருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும் தென்காசி மாவட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த காவல்துறையினருக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி தகுந்த அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார். பின்னர் இயற்கையை பாதுகாக்கும் விதமாக மாவட்ட காவல் அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார். இந்நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.V.R.ஸ்ரீனிவாசன் அவர்கள் உடனிருந்தார்.



## “கலப்படம் நடக்கவாய்ப்பில்லை”

# பல்லாவரம் தண்ணீரை குடித்து ஆய்வு மேற்கொண்ட தாம்பரம் ஆணையர்

தாம்பரம் மாநகராட்சியில் பல்லாவரத்தில் திடீரென பலருக்கும் வாந்தி மயக்கம் ஏற்பட்டது. அவர்களில் 3 பேர் உயிரிழந்தனர். அங்கு விநியோகிக்கப்பட்ட குடிநீருடன் கழிவுநீர் கலந்ததே இதற்குக் காரணம் என்று அப்பகுதி மக்கள் கூறிய நிலையில், அதை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மறுத்திருந்தார். இதற்கிடையே அங்கு ஆய்வு செய்த தாம்பரம் கமிஷனர் பாலச்சந்தர் ஆய்வின் போது அங்கு சப்ளை செய்யப்பட்ட தண்ணீரைக் குடித்து சோதனை செய்தார்.

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பல்லாவரம் அடுத்துள்ள மலைமேடு பகுதியில் சுமார் 30 பேருக்கு வாந்தி, வயிற்றுப் போக்கு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டன. அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் 3 பேர் வரை உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. அங்கு விநியோகிக்கப்பட்ட தண்ணீரில் கழிவுநீர் கலந்ததாகவும் இதன் காரணமாகவே மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டோரின் உறவினர்கள் கூறினர். இதையடுத்து அங்குத் தண்ணீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்ட சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், அப்பகுதியில் மருத்துவ முகாமும் அமைக்கப்பட்டது.

அமைச்சர் தா.மோ.அன்பரசனும் அப்பகுதிக்கு விரைந்தார். அங்கு ஆய்வு செய்த அவர், தண்ணீரில் கழிவுநீர் கலந்ததாகத் தெரியவில்லை என்றும் அப்படி நடந்து இருந்தால் இப்பகுதியில் உள்ள அனைவருக்கும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கும் என்று குறிப்பிட்டார். மேலும், இப்பகுதி மக்கள் சாப்பிட்ட உணவு காரணமாகவே புட் பாய்சனிங் ஏற்பட்டு இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். இங்குள்ள ஏரியில் இருந்து மீன்களைப் பிடித்துச் சாப்பிட்டுள்ளனர் என்றும் இதனால் கூட பாதிப்பு ஏற்பட்டு இருக்கலாம் என்றும் அமைச்சர் அன்பரசன் தெரிவித்தார்.

இதற்கிடையே தாம்பரம் மாநகராட்சி ஆணையர் பாலச்சந்தர் அந்த பகுதிகளில் சோதனை செய்தார். அங்கு மருத்துவ முகாம்கள் நடந்த நிலையில், அங்கும் ஆணையர் பாலச்சந்தர் நேரில் சென்று பார்வையிட்டார். மேலும், அப்பகுதியில் உள்ள மக்களுக்குத் தேவையான மருத்துவ பொருட்களையும் வழங்கினார். அதைத் தொடர்ந்து அங்கு மெட்ரோ நீர் அவரது முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. அப்போது அந்த நீரை அவர் குடிக்கவும் செய்தார். முன்னதாக குடிநீரில் கழிவுநீர் கலந்ததாக எழுந்த புகார் தொடர்பாகத் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் பாலச்சந்தர் விளக்கம் ஒன்றையும் அளித்திருந்தார். அதில் அவர், "கடந்த சனிக்கிழமை தான் கடைசியாகத் தாம்பரம் 13வது வார்டு காமராஜ் நகரில் குடிநீர் சப்ளை செய்யப்பட்டது. அதன் பிறகு குடிநீர் சப்ளை எதுவும் நடக்கவில்லை..

கண்ணபிரான் கோவில் தெரு அருகே உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்தே தண்ணீர் சப்ளை நடந்துள்ளது. அதுவும் கூட கண்டோன்மெண்ட் பகுதிக்குத் தண்ணீர் சப்ளை நடக்கவில்லை. இதனால் என்ன நடந்தது என்பது குறித்து விசாரித்து வருகிறோம். குடிநீரில் கழிவுநீர் கலந்ததா என்பது சோதனையில் தெரிய வரும். இருந்த போதிலும், குடிநீர் விநியோக தொட்டிகளைச் சுத்திகரிக்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம். சுத்திகரிப்பு பணிகள் முடிந்த பிறகு மீண்டும் தண்ணீர் சப்ளை செய்யப்படும்" என்று அவர் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**

# Z System Intelligent Controls Private Limited

system

*Intelligence in Automation*

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We are conversant in handling IOT, VR ,AR & ER applications.

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across the globe.

## Our Principles & Products

SIEMENS



PLC,HMI, Scada, VFD, RFID, MindSphere

azbil



Temperature Controller, Recorders, Switch, Sensors

TURCK



Sensors, Connectivity. Interface technology Analysers

AR, VR & ER Developement




Solutions for IOT and Industrial 4.0

## Our Service



Power



Water & Waste water



Metro



SPM



Cement



Metal



Smart World

## Our Clients

## Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.54
44th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Phone : 098404 53136

/zsystem.in
/zsystem_in
/z-system-intelligent-controls-pvt-ltd


GEESYS
SOLAR DCDB 14 IN 14 OUT
Winter OFFER
FEATURES
100% PC Enclosures
Mounting Plates
Wall Clamps
Tested/Certified
Wire Harnessed
Extended Warranty
FEW OF OUR PRODUCT RANGE
SOLAR ACDB
EB METERING PANEL
FIRE FIGHTING PANEL
SERVO STABILIZER & IT
MOTOR STARTERS
APC
SOLAR DCDB
OUR CERTIFICATIONS
OUR AUTHORISED DISTRIBUTORS
Redington
SOLAR
VIRIDIS
GEESYSINDIA.COM
9962012354
INFO@GEESYSINDIA.COM